Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

දිනක්කදිර්

ஒளி - 02 - கதிர் - 295 10-02-2002 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=

மட்டு நகரில் ஒப்செட் அச்சுமுறையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்கள்

ஈஸ்டன் கிராபிக்ஸ்

தற்போது 'தினக்கதிர்' அலுவலகத்தில் இயங்குகிறது.

சகல விதமான அச்சு வேலைகளுக்கும் உடன் நாடுங்கள்

இல.155, திருமலை வீதி, மட்டக்களப்பு. T.P.065.22554

28 FEB 2002
யாழ்ப்பாணம்

# மட்டு. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான 57 வேட்புமனுக்களில் 23 நிராகரிப்பு.

## கடைசிநேரம்வரை தயாராகாததாலேயே இக்குழப்பம் என பலரும் கவலை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட உளளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கலில்,கடைசி நிமிடம் வரை பல்வேறு குழப்பங்கள் காணப்பட்டமையும் கட்சிகள் பல தயார் நிலையில் இருந்திராமையுமே பல வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக இரு பிரதேச சபைகளில் போட்டியின்றி குழுக்கள் தெரிவாகியுள்ளதுடன் மற்றும் பல இடங்களில் கட்சிகள் பலவும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட முடியாமல் போயிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மாநகரசபை, ஒரு நகர சபை, பத்து பிரதேச சபைகளுக்குமென தாக்கல் செய்யப்பட்ட 57 வேட்புமனுக்களில் 23 நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

சில குழுக்கள் உரிய நேரத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்யத்

(16ம் பக்கம் பார்க்க)

## விசாரணையைத் துரிதப்படுத்துமாறுகோரி மடவள முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

### மக்கள் விரக்தியுற்றிருப்பதாக அஸ்மி மரிக்கார் குற்றச்சாட்டு.

(சிறப்பு நிருபர்)

டிசம்பர் 5ம் திகதி கண்டி மடவளயில் வைத்து படுகொலை செய்யப்பட்ட, முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பற்றிய விசாரணைகளைத் துரிபடுத்துமாறு கோரி நேற்று மடவளயில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சுமார் 3000 பொதுமக்கள் கலந்து கொண்ட இவ்வார்ப்பாட்டத்தில், விசாரணைகளைத் துரிதப்ப

(16ம் பக்கம் பார்க்க)

## உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக அனுருத்த ரத்வத்தையிடம் வாக்குமூலம்!

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தினத்தன்று கண்டி உடத்தலவின்னவில் நடைபெற்ற மனிதப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக, நேற்றைய தினம் முன்னாள் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்தையிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததையடுத்து, அங்கு வந்த அனுருதத ரத்வத்தையிடம் தாம் கண்டி உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக அவரது வாக்குமூலத்தை பதிவு செய்ததாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்படுகொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்கள் இருவரைக்கைது செய்வது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.என்பதும் ரத்வத்தையின் மகன்மார் இருவர் இக்கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## "தமிழ் எங்கள் உயிர்"





வன்னியில் கண்ணிவெடிகளை தேடி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## காதலர் தினம்

மேற்குலகப் பெண்ணியத்துக்கு சவால்








செவிப்புலனற்றோர் வாழ்வோசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தினக்கதிர்**

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@sltnet.lk

## 'தமிழ் எங்கள் உயிர்'

இந்த நாட்டில் நாம் பல்வேறு வழிகளிலும் அடக்கப்படவும், ஒடுக்கப்படவும் காரணமாகவிருப்பது நாம் தமிழர்கள் என்பதுதான்.

நாம் தமிழ்மொழியைப் பேசுகின்ற ஒரு இனம் என்ற'அடிப்படையிலேயே, 1956ஆம் ஆண்டுமுதல் இந்தத்தீவின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற இனவன்செயல்களிலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டோம்.

ஒவ்வொரு அரசபடை -காவலரண்களிலும் நாம் அடையாள அட்டைகளைக் காட்ட வேண்டியிருப்பதற்கும், வதிவிட அனுமதிப்பத்திரம் வைத்திருக்கவேண்டி இருப்பதற்கும், நாட்டின் ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு சுதந்திரமாக நடமாட முடியாமல் இருப்பதற்கும்,

இன்னும், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற கொடிய சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, காரணமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்படுவதற்கும், வகைதொகையின்றிப் படுகொலை செய்யப்படுவதற்கும் என நாம் அனுபவிக்கின்ற எத்தனையோ துன்பங்களுக்கும் காரணம் நாம் தமிழர்கள் என்பதுதான்.

இத்தகைய கொடுமைகள் மூலம் தான் எமதுஅடையாளம'தமிழ்' என மீள மீள வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கையர்கள் என்ற அடையாளத்தை தாண்டி நாம் தமிழர்கள் என்றஅடையாளத்தை நாம் முதன்மைப்படுத்த எம்மை நிர்ப்பந்தித்தவை இக்காரணிகள்தான்.

நாம் அடக்கி ஒடுக்கி விரட்டியடிக்கப்பட்ட போதெல்லாம் நாம் ஓடிச்சென்று தஞ்சம் அடையக்கூடியதாக இருந்தும், அதேகாரணத்தால் பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டதுமான இடங்கள் இந்தத் தமிழ் மொழியைப் பேசுபவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளாகவே இருந்தது.

இதன்வழி தமிழ்மொழியைப் பாரம்பரியமாகப் பேசிவருகின்ற மக்களின் மரவுவழித் தாயகமான இவ் வடக்கு் கிழக்குப் பிரதேசமும்,தமிழ் அடையாளத்தைப் பெற்று தமிழர்களின் மரவுவழித் தாயகமாக-தமிழீழமாக அடையாளப்படுத்தப்பட்டது.

தமிழ் மொழியைப் பேசும் இனம் என்பதற்காகவே அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் என்பதால் இவ் மொழிவழித் தாயகப் பிரதேசம் தன்னாட்சியுடன் திகழ்வதே அம்மொழியைப் பேசுபவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதமளிக்கும் ஒரேவழி என்ற வகையிலேயே தாயக விடுதலைக்கான போரை முன்னெடுக்க தமிழர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இவ்வாறு நாம் பேசும் மொழியாகிய தமிழே,இன்று எமது உயிர் மூச்சாக அமைந்துள்ளது.

இவ்வகையிலேயே மன்னார் மாவட்டத்தில் வன்னி,மன்னார்ப் பகுதி மக்கள் ஒன்றிணைந்து "தமிழ் எங்கள்" உயிர் என்கின்ற எழுச்சி நிகழ்வை நிகழ்த்தியுள்ளனர்.

சென்ற ஆண்டு யாழ் வவுனியா, மட்டு, மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சியின் தொடர் நிகழ்வுபோல அமைந்துள்ள 'தமிழ் எங்கள் உயிர்" தொடர்ந்து வடக்குக் கிழக்குப் பகுதியெங்கும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# பேரினவாதம் அணிதிரண்டு வரும் வேளையிலும் தூங்குவது போல் நடிக்கும் தமிழ் அரசியல் தலைமைகள்

**ஸ்ரீ**லங்காவின் 2001ஆம் ஆண்டு டிசம்பர் பொதுத் தேர்தல் காலத்தில் தமிழர் தரப்பில் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகளான,

1. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்பட வேண்டும்.
2. வடக்குக், கிழக்கில், படையினரின் கட்டுப்பாட்டின் கீழே இல்லாத, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும்.
3. போர் நிறுத்தப்பட்டு,தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் (மட்டும்) பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

போன்ற கோரிக்கைகள், தேர்தல் முடிந்த இரண்டுமாதகாலம் நிறைவடைந்த நிலையிலும் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பொருளாதாரத் தடைத் தளர்வு என்ற விடயம் மட்டுமே, இதுவரையில ஓரளவுக்கு கவனிப்பைப் பெற்றுள்ளது. அதுவும், செய்யப்பட்டதைவிட பெரியளவு தோற்றத்துடன் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. முற்றாகத் தடைசெய்யப்பட்ட ஒரு சில பொருட்களைத் தவிர, ஏனையவை அனைத்தையும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு, எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி எடுத்துச் செல்ல முடியும் என அரசு அறிவித்த போதும், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இந்நடைமுறையானது ஒரு பத்து வீதம் தானும் பின்பற்றப்படுவதாயில்லை.

அரசின் அறிவிப்பு வடக்குக்கே எனக் கூறிக்கொண்டு இப்பகுதிகளில் இராணுவத்தினரும், அதிரடிப்படையினரும் கட்டுப்பாடுகளை பெருமளவு முன்புபோலவே பேணி வருகின்றனர்.

வடக்கைப் பொறுத்தவரையிலும் கூட, வன்னிப்பகுதிக்கு ஓரளவுக்கு லொறிகளில் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்பட்டாலும், யாழ் குடாநாட்டில் முன்னெப்போதும் இருந்திரா அளவு பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது.

எனவே பொருளாதாரத் தடைத் தளர்வு என்பது, வெளி உலகுக்குக் காட்டுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே காணப்படுகின்றது.

அரசினால் எடுக்கப்பட்டு வருகின்ற ஒரேயொரு சமாதான முன்முயற்சியான பொருளாதாரத் தளர்வு முயற்சிகள் இப்படி இருக்க, அண்மைக் காலமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்க விவகாரமும்,பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேணடும் என்ற விடயமும் தமிழ் மக்கள் முன் எழுந்துள்ள பிரதான பிரச்சினைகளாக இருக்கின்றன.

பாராளுமன்றத் தோதல் காலத்தில் புலித்தடை சமாதானத்திற்குத் தடையாக இருந்தால் அதனை நீக்குவதில் சிக்கலேதும் இல்லை எனக்கூறி சமாதான விரும்பியாகத் தன்னை வெளிப்படுத்தித் தேர்தலில் வெற்றியீட்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ, தான் முன்பு கூறியது போலவே, புலித்தடை நீக்கப்படுவதன் அவசியத்தை அண்மையில் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

> ***தனக்கு மூக்கறுந்தாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனம் பிழைத்தால் சரி என்ற மனப்போக்குடன் செயற்படும் சிங்களப் பேரினவாதச் சக்திகள் தங்கள் தலையில் தாமே மண்ணள்ளிப்போடும் கைங்காரியத்தைக் கச்சிதமாகச் செய்து வருகின்றன.***

எனினும், தவறிப்போய்த் தமிழனாய்ப் பிறந்த முன்னாள் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர், ஜனாதிபதி சந்திரிகாவின் பெயரால் பாராளுமன்றத்தில் எழுப்பிய எதிர்ப்புக் குரலும், காலாகாலமாக இலங்கை அரசியலைத் தீர்மானித்துவரும் பௌத்த பிக்குமாரின் குழப்பமான நிலைப்பாடுகளும், ரணில் விக்கிரமசிங்ஹாவுக்கு. தனது நிலைப்பாட்டிலிருந்து நழுவுவதற்கான நல்லதோர் சாட்டாக அமை[illegible] தென்னிலங்கையில் [illegible] பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி, சிஹ்றல உறுமய, பூமிபுத்ர போன்ற கட்சிகள், புலித் தடை நீக்கப்படக் கூடாதெனக் கூறி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

''நாட்டைத் துண்டாடும் ஐக்கிய -தேசியக் கடசியின் சதித் திட்டத்தை எதிர்க்கிறோம்" என்று கூறித் தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பி.யும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், தமக்கு ஐம்பது இலட்சம் மக்கள் வாக்களித்துள்ளனர் எனக்கூறி, எனவே புலிகளுடன் பேசுவதற்கான மக்களாணை தமக்குக் கிடைத்ததாக ஐ.தே.க. கூறமுடியாது



என்று சவால்விட்டு வருகின்றன.

உண்மையில், தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை விட ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையே பிரதான இலக்காகக் கொண்டு, அதற்குப் பிரதான தடையாகவுள்ள போரை நிறுத்தும் நோக்குடனே ரணில் தலைமையிலான ஐ.தே.மு அரசு சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ரணில் அரசு தான் நினைத்ததைச் சாதித்து ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தைக் காப்பாற்ற வேண்டுமாயின், .போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும். அவர்களுடன் பேச வேண்டுமாயின், முதலில் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும்.

இதனைச் சரியாக விளக்கியே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ தனது பாராளுமன்ற உரையை நிகழ்த்தியிருந்தார்.

'எனினும் தனக்கு மூக்கறுந்தாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனம் பிழைத்தால் சரி' என்ற மனப் போக்குடன் செயற்படும் சிங்களப் பேரினவாதச் சக்திகள். தங்கள் தலையில் தாமே மண்ணள்ளிப் போடும் கைங்கரியத்தைக் கச்சிதமாகச் செய்துவருகின்றன.

எப்படியோ, இனப்பிரச்சினையைத் தீர்க்கிறேன் எனப் புறப்பட்ட ரணிலும் மெதுமெதுவாக பேரினவாதத்தின் ஊதுகுழலுக்கு ஆடியபடி, 'தடைநீக்கம் இல்லை, தமிழர் தாயகக் கோட்பாட்டை நான் ஏற்கவில்லை' என்று கூறி, சமாதானம் ஏற்பட்ட பின்னரே புலித்தடை நீக்கம் பற்றி ஆலோசிக்கப்படும் என பேரினவாதத்துக்குப் பக்கப்பாட்டுப் பாடியுள்ளார்.

ஆரம்பம் முதலே புதிய அரசின் சமாதான முயற்சியில் இருக்கக்கூடிய சந்தேகங்களை அலட்சியம் செய்து வந்த கடந்த தேர்தலில் தமிழ் மக்களின் ஒருமித்த ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதாவது புதிய அரசின் உண்மைச் சொரூபத்தைக் கண்டுகொள்ள வேண்டும். போலிச் சமாதானத்தின்பால் மக்க[illegible] மயக்கங்களைத் தீர்த்து, [illegible] விழிப்புடன் இருக்கச் செய்ய வேண்டிய கடமையை, இதுவரையில் செய்யத் தவறிய தமிழர் கூட்டமைப்பு, இப்போது மக்கள் விழிப்படைந்துள்ள நிலையிலும், தூங்குவது போல் நடித்துக்கொண்டிருப்பது அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களை மடையர்கள் ஆக்கும் செயல்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்கின்ற கடிநாயை அவிழ்த்து விட்டுவிட்டு, தமது சமாதானக் கோட்டைக்குள் சல்லாபம் செய்ய வருமாறு அழைக்கும் சிங்கள அரசின் மாயவலைக்குள் மக்களை இன்னமும் இழுத்துச் செல்பவர்களாகவே, தமிழ் அரசியல் தலைமைகள் செயற்பட்டுக் கொண்டிருப்பார்களேயானால், அவர்களுக்கான தக்க பாடத்தைத் தமிழ் மக்கள் புகட்ட வேண்டியிருக்கும்.

சமாதான முயற்சிகளில் தமக்கிருந்த நம்பிக்கையை தற்போது தமிழ் மக்கள் மெது மெதுவாக இழந்துவருகின்றனர். இந்நிலையில் தமிழ் மக்களுடைய உ[illegible] ஒன்றுதிரட்டி, ஒரு வெகுஜன எழு[illegible] அதனை அரசுக்கும். சா[illegible] கும் எடுத்துக்காட்ட வேண்டிய [illegible] இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமை[illegible] உண்டு.

கடந்த ஞாயிறன்று, புலித்தடை. பயங்கரவாதத் தடைச்சட்டம் எனபவற்றை நீக்கு!, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்!, எனக்கோரி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில், வெகுஜன ஒன்றியம் சமாதானப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தது.

இதில், அம்பாறை மாவட்டத்தில் நடாத் தப்பட்ட போராட்டம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்திருந்தது. மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து, கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தலைமையில் நடாத்தப்பட்ட பேரணியில், பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா தலைமையில் பெருமள்வு எண்ணிக்கையிலான முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டதுடன், முஸ்லிம் பகுதிகளிலும் கடைகள் பூட்டப்பட்டு இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து கூட்டாக ஒரு போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை நல்லதோர் ஆரம்பம்.

இவ்வாறே, யாழ் மாவட்டத்தில், வடம ராட்சி மீனவர் சங்கங்களின் சமாசம், கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி, மாவட்டச் செயலகத்தின் முன்னால், ஒருவார காலத்துக்கு மேலாக ஒரு மறியல் போராட்டத்தை நடத்தி வருகிறது. எந்தவொரு அரசியல் தலைவரின் வழிகாட்டலுமின்றி மீனவர் சமூகத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் இப்போராட்டம், மக்கள் எழுச்சிக்கு ஒரு நல்ல உதாரணமாகத் தொடரப்பட்டு வருகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் போர்நிறுத்தம் காரணமாக நீண்டகாலத்துக்குப் பிறகு, தென்னிலங்கை தமது சுதந்திரதினத்தைச் சுதந்திரமாகக் கொண்டாடிக் கொண்டிருக்க, அங்கே யாழ்ப்பாணக் கச்சேரியில், தேசியக் கொடிக்குப் பதிலாக, கறுப்புக்கொடி எற்றப்பட்டு, அத்தினம் தமிழர் உரிமைகள் மறுக்கப்பட்ட தினமாக நினைவு கூறப்பட்டுள்ளது. (15ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் நடைபெற்ற

# தமிழ் எங்கள் உயிர் எழுச்சி விழா

இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ''தமிழ் எங்கள் உயிர்'' எழுச்சி நிகழ்வு மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேசத்தில் உள்ள முத்தரிப்புத்துறையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது எழாம் திகதி இறுதி நிகழ்வாக வரலாற்றுச் சிறப்பு மிக்க ''தமிழ் எங்கள் உயிர்'' நடைபெற்றதை நேரில் கண்டவர்கள் வியந்து நின்றனர்.

''தமிழ் எங்கள் உயிர்'' நிகழ்வைக் கண்டு தகவல்களைத் திரட்டவென ஊடகவியலாளர் குழுவொன்றுடன் நிகழ்வு நடைபெறும் பிரதேசத்தை நோக்கி வாகனமொன்றில் சென்றுகொண்டிருக்கும் போதே நிகழ்வின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டோம். வவுனியாவில் இருந்து கூட மக்கள் சென்று கொண்டிருந்தனர். முருங்கனைச் சென்றடைந்ததும் அங்கு கண்டவையும் திகைப்பூட்டுபவையாக இருந்தன.



மஞ்சள்,சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதி

நிகழ்வு நடைபெறும் இடத்திலிருந்து பதினைந்து மைல்களிற்கு முன்னதாகவுள்ள முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் கூட வளைவுகள் கட்டப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடிகளினால் முருங்கன் நகர்ப்பகுதியில் பொலிஸ் காவலரண் பகுதிகள் கூட அலங்கரிக்கப்பட்ருந்தன.''தமிழ் எங்கள் உயிர்'' என்ற பதாதைகளும் கட்டப்பட்டிருந்தன.

மிதிவண்டி, மோட்டார் சைக்கிள், கார், சிறியவான், முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம், பாரஊர்தி, பேரூந்துகள், தனியார் பேரூந்துக்கள் என பலதரப்பட்ட வாகனங்களில் தமிழ் எங்கள் உயிர் பேரணி ஆரம்பமாகும் அல்லிராணி கோட்டை பகுதிக்கு மக்கள் வந்து சேர்ந்தனர். போக்குவரத்து வசதிக் குறைவால் மன்னார் நகரிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வரமுடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது. வாகன வசதியின்மையினால் நூற்றுக்கணக்கான அலங்கரிக்கப்பட்ட படகுகளில் கூட மக்கள் வந்து ''தமிழ் எங்கள் உயிர்'' நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அல்லிராணி கோட்டை பகுதிலிருந்து மாலை நான்கு மணியளவில் ஆரம்பமான பேரணியில் சுமார் இருபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். தவில் நாதஸ்வரங்களில் மங்கள ஒலி இசைக்கப்பட்டுக்கொண்டிருக்க, அந்த மக்கள் இசைக்குப் பின்னே பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், தமிழ் அரசியல் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணி, ரெலோ, புளொட் ஆகியவற்றின் பிரதிநிதிகள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான இராஜகுகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோருடன் பல்லாயிரக்கணக்கான மக்களும் பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியில் கலந்து கொண்டவர்களின் பெருமளவானவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் புகைப்படமும் அதில் பொறிக்கப்பட்ட தமிழ் எங்கள் உயிர் அவ் உயிரே பிரபாகரன் என்ற வாசகத்துடனும் உள்ள அட்டைகளை ஏந்திச் சென்றனர். அரசே விடுதலைப்புலிகளின் தடையை நீக்கு! விடுதலைப்புலிகளுடன் பேசு! என்ற கோசங்களையும் அவர்கள் எழுப்பியும் சென்றனர்.

இந்த நிகழ்வின் நோக்கமே தமிழரின் விடுதலையை பெற்று தமிழர் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதுதான் மன்னார் வாழ் மக்கள் இதனை ஒன்று திரண்டு எடுத்துக் கூறியுள்ளனர். பேரணி சென்ற இடங்களில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு பல வீதி வளைவுகள் கட்டப்பட்டு அதில் தமிழ் விடுதலையைச் சித்தரிக்கும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. சிவப்பு மஞ்சல் கொடிகளினால் தொடர்ச்சியாக மேடை நிகழ்வுகள் நடைபெறும் முத்தரிப்புதுறை விளையாட்டு மைதானம் வரை அலங்கரிக்கப்பட்டிருந்தது. களப்புக் கரைப்பக்கமாக நீரில் அலங்கரிக்கப்பட்ட படகில் விடுதலைப்புலிகளின் தலைவருடைய பத்தடி உயரமான உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது.

பேரணியில் வந்த மக்கள் வெள்ளம் விளையாட்டு மைதானத்தை வந்தடைந்ததும் மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகியது; மங்கல விளக்கேற்றலை அடுத்து மாணவிகள் தமிழ்த் தாய் வாழ்த்திசைத்தனர். தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் தாமே முன்வந்து நடத்திய கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினரும், நிகழ்வில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களும் தமிழ் உணர்வோடு உரையாற்றினர். நாடாளுமன்ற உறுப்பி னர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோரின் ஆசிச் செய்திகளும், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் பிரதம குரு ஆகியோரின் ஆசிச் செய்திகளும் மேடையில் வைத்து வாசிக்கப்பட்டன.

இந்த நிகழ்வைக் காணவென முருங்கன் பொலிஸ் நிலையத்திலிருந்து ஐந்து பொலிஸார் வந்திருந்தனர் இவர்களிற்கு விழாக்குழுவினர் சிற்றுண்டி, தேனீர் வழங்கினர். இந்த பொலிஸார் இரவுத் தங்கலை தவிர்த்து பகல் பொழுதே அங்கிருந்து முருங்கனிற்குச் சென்றுவிட்டனர்.ஆனாலும் படைப் புலனாய்வுத்துறையினரும் சீருடையில்லாத படையினரும் மக்களோடு





கலந்து நடமாடியதாக மக்கள் பேசிக் கொண்டனர். இந்த நிகழ்வு நடைபெற்ற இடம் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசமென்று சொல்ல முடியாத நிலையில் உள்ளதையும் கூறுவதன் மூலமே நிலைமையைப் படிப்போர் விளங்கிக் கொள்வார்கள்.

விடுதலைக் கீதமும் சுதந்திரக் காற்றோடு வந்து செவிகளில் புகுந்துகொள்ள அங்கு திரண்டிருந்த மக்களிடையே எந்தொரு சிறு குழப்பமும் ஏற்படவில்லை. தென்னிலங்கையிலிருந்து வந்த பத்திரிகையாளர் ஒருவர் அந்த நிகழ்வினைப் பார்வையிட்டு கூறியவொன்றை இங்கு குறிப்பிடுவதன் மூலம் அந்த நிகழ்வின் ஒழுங்கு நிலை தெளிவாக விளங்கும்.

அதாவது கொழும்பில் ஒரு சிறிய நிகழ்வு நடைபெற்றாலே அடிதடிகளும் பொலிஸ் முறைப்பாடுகளும் ஏராளமாகவே இருந்திருக்கும். இங்கு வீதி ஒழுங்குகளைக் கவனிக்க சாரணர் அணியினர் நின்றனரே தவிர வேறு எந்தவொரு பாதுகாப்பு அணியினரும் கடமையில் இல்லாது இவ்வளவு ஒழுங்காக இந்த நிகழ்வு நடைபெற்றது என்பது ஆச்சரியம் தானே.

''தமிழ் எங்கள் உயிர்'' மன்னார் மாவட்ட மக்களின் தமிழ்ப் பற்றுணர்வு, அவர்களின் விடுதலையுணர்வு ஒன்று குவிந்த எழுச்சியுணர்ச்சி......... இவ்வளவு பெரும் தொகையான மக்கள் திரண்டு பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டனர்.

இந்த நிகழ்வு ஏனைய இடங்களில் வாழும் மக்களிற்கு முன்னுதாரணமான நிகழ்வு இதனைப்பின் பற்றி தமிழ் எங்கள் உயிர் என்ற தமிழ் உணர்வு தொரட்டும். எம்மினம் விடுதலை பெற்று சுதந்திரமாக வாழவேண்டுமெனில் போராடியே ஆகவேண்டும். அனைத்து ஆக்கிரமிப்புக்களையும் அடக்குமுறைகளையும் மக்கள் சக்தியே தூக்கியெறியும், மன்னாரில் நிகழ்ந்த இந்த தமிழ் எங்கள் உயிர் வரலாற்று சிறப்பு மிக்க எழுச்சியுணர்வு அனைத்து தமிழ் மக்களிடையேயும் பொங்கியெழட்டும் என்பதை தமிழ் எங்கள் உயிர் நிகழ்வைக் கண்ட பின்னர் எடுத்துரைக்க வேண்டியதாய் உள்ளது.

மன்னார் மக்களின் எழுச்சி தமிழ் எங்கள் உயிர்உயிரினும் மேலாய் விடுதலையினை நேசிக்க வைத்திருக்கிறது.

கனகரவி



அலங்கரிக்கப்பட்ட படகுகள்



கடற்கரையூடு நீண்டு செல்லும் ஊர்வலம்

### தமிழ் எங்கள் உயிர்-2002 எழுச்சி விழா- பிரகடனம்

மன்னார் மாவட்டத்தின் மக்களாகிய நாம் தமிழ் எங்கள் உயிர் நிகழ்வின் மூலம் பின்வரும் கோரிக்கைகளை சிறிலங்கா அரசிற்கு முன்வைக்கிறோம்.

தமிழ் எங்கள் உயிர் நிகழ்வானது எமது அனைத்து தமிழினத்தின் அபிலாசைகளான மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, என்பவற்றை வலியுறுத்தி முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என பதவிக்கு வந்த அரசு, தமிழ் மக்களின் அபிலாசைகளான மரவு வழித்தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரித்து தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தமிழ் மக்களுக்கு நீதியான, நிரந்தரமான தீர்வை வழங்க வேண்டும் என்பது எமது அவாவாகும்.

மன்னார் மாவட்டத்தின் மக்களாகிய நாம் தமிழ் எங்கள் உயிர் நிகழ்வின் ஊடாக பின்வரும் கோரிக்கைகளை அனைத்து தமிழ் மக்களின் சார்பில் சிறிலங்கா அரசிற்கும், சர்வதேசத்திற்கும் இவ்வேளையில் முன்வைக்கிறோம்.

❋தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையும், தன்னாட்சி உரிமையையும் அங்கீகரித்து எமது மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டும்.

❋தமிழ் மக்களின் பாதுகாவலராக விளங்கும் விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்று அவர்களின் மீதான தடையை நீக்க வேண்டும்.

❋தமிழ் மக்களின் மரவு வழித் தாயகப்பகுதிகளை ஆக்கரமித்துள்ள இரா ணுவம் உடனடியாக வெளியேற்றப்படுவதுடன் சிங்களக குடியேற்றங்கள் நிறுத்தப்பட்டு நிறுவனப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றம் அகற்றப்பட வேண்டும்.

❋பயங்கவாதத் தடைச் சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் பலவந்தமாக கைது செய்யப்பட்டு நீதி விசாரணை இன்றித் தடுத்து வைக் கப்பட்டுள்ள அனைத்து இளைஞர் யுவதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

❋வன்னி வாழ் எமது உடன் பிறப்புக்கள் மீது சிறி லங்கா அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வீண் சந்தேகங்கள் மேலதிக பொருளாதாரச் சுமைகள் முற்றுமுழுதாக நீக்கப்பட்டு அவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு அனுமதிப்பதுடன் அனைத்து மருத்துவ தடைகளும் நீக்கப்படுவதுடன் முழுமையான நிவாரண கொடுப்பனவுகளும் பாரிய புனருத்தாரண, புனர் நிர்மான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்ட கோரிக்கையை சிறிலங்கா அரசின் அதி உயர் பீடத்திற்கு சமர்ப்பிக்கும் பொருட்டு மன்னார் மாவட்ட அனைத்து தமிழ் மக்களும் ஓர் அணியில் திரண்டு மன்னார் மாவட்ட செயலாளரிடம் இன்று கையளிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரிமைகளுக்குப் பதிலாக சலுகைகளை வீசும் புதிய அரசின் சமாதான முயற்சிகள்

ஜி. நடேசன்

இலங்கை இன முரண்பாடுகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு நோர்வே அரசு பகிரங்க முயற்சிகளை எடுத்து வருகிறது. முரண்பாடுகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு இருதரப்பினரும் விட்டுக்கொடுப்புக்களைச் செய்வது மிக மிக அவசியமாகும். அந்த வகையில் சமாதான மேசைக்கு வருவதற்காக இலங்கை அரசு பிரச்சார ரீதியான விட்டுக்கொடுப்புக்களை செய்து வருகின்றதே தவிர நடைமுறையில் இல்லையென்றே மக்கள் கருதுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு தமிழ் மக்கள் சாத்வீக ரீதியில் 27 வருடங்களும் (1949-1976) முடியாத நிலையில் ஆயுத ரீதியில் 25 வருடங்களும் (1976-2001) போராடி வருகிறார்கள்.

மாறி மாறி ஆட்சி செய்த இரு பேரினவாத கட்சி அரசுகளும் இனமுரண்பாட்டை தீர்ப்பதற்கு ஆரம்பத்தில் முற்று முழுதாக அடக்கு முறையைப் பிரயோகித்து பார்த்தன. பின்னர் புலிகளைப் பலவீனப்படுத்தி சலுகைகளை வழங்க முற்பட்டன. அதுவும் முடியாத பட்சத்திலேயே பேச்சுவார்த்தை மூலம் புலிகளை வழிக்கு கொண்டு வரலாமென்ற நம்பிக்கையுடன் நோர்வே உதவியை நாடியுள்ளன.

**மாறி மாறி ஆட்சி செய்த இரு பேரினவாத கட்சி அரசுகளும் இனமுரண்பாட்டை தீர்ப்பதற்கு ஆரம்பத்தில் முற்று முழுதாக அடக்கு முறையை பிரயோகித்து பார்த்தன.**

எந்தவொரு சமரச முயற்சியும் வெற்றியளிப்பதற்கு முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்குமிடையே பரஸ்பர நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதில் ஐக்கிய தேசியமுன்னணி அரசு இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளை விட அரசாங்கமென்ற பொறுப்புணர்வோடு அரவணைக்க வேண்டிய அதீத கடப்பாடு இலங்கை அரசுக்கே உண்டு.

ஆனால் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்ற கையோடு போர்நிறுத்தத்தை அறிவிக்குமென பலரும் எதிர்பார்த்த வேளை தமிழீழ விடுதலைப்புலிகளே ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்தார்கள். அரசாங்கம் பதிலுக்கு மோதல் தவிர்ப்பையே அறிவித்து இன்றுவரை கடைப்பிடித்து வருகிறது. இது அரசு சமாதான முயற்சிகளில் அவநம்பிக்கையோடு நுழைந்துள்ளதையே கட்டியம் கூறுகிறது.

பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதற்கு அடுத்த கட்டமாக சோதனைச் சாவடி நீக்குதல், பொருளாதாரத் தடை நீக்குதல் என்பவற்றை மேற்கொள்வதாக அரசு தீவிர பிரச்சாரப் போரை நடாத்தி வருகிறது. ஆனால் கொழும்பு மற்றும் தென்னிலங்கையில் வீதி தடைகளை அகற்றுவதில் காட்டும் ஆர்வத்தை வடக்குக் கிழக்கில் இன்னமும் காட்டவில்லை.

**எந்தவொரு முரண்பாட்டையும் வெற்றிகரமாக தீர்ப்பதற்கு முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தமது நிலைப்பாடுகளில் விட்டுக்கொடுப்புகளை செய்து மையத்தை நோக்கி நகரவேண்டும்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் நகரில் கூட இன்னமும் சில வீதிகள் போக்குவரத்திற்கு திறக்கப்படவில்லை. மாநகரசபை கட்டிடத்தில் 23.3வது படைப்பிரிவு மாவட்ட தலைமையகம் இயங்கி வருகிறது. அரசடி நூலக கட்டிடத்தில் பொலிஸ் காவல் நிலையம் இயங்குகிறது. இந்து இளைஞர் மன்ற கட்டிடம் படையினர் வசம் உள்ளது. பொதுமக்கள் வீடுகளிலும் முகாம்கள் இயங்கி வருகின்றன.

அதேபோல தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையகம் உள்ள வன்னி பகுதிக்கு பொருட்களை அனுப்புவதை அரசு ஊடகங்கள் மூலம் பெரிதாக பரப்புரை செய்தது. ஆனால் யாழ்.குடாவில் மீன்பிடித்தடையை விலக்கக்கோரி மாவட்ட செயலகத்தில் மீனவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

யாழ்.மீனவர்களின் தொழில் செய்யும் உரிமையைக்கூட சில சலுகைகளைக்கொடுத்தும், மீனவர்கள் சங்கங்களை பிரதேச ரீதியாக பிரித்து பலவீனப்படுத்தி போராட்டத்தை மழுங்கடிப்பதிலேயே படைத்தரப்பு அக்கறையாக உள்ளது.

**தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மையத்தை நோக்கிய பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக தமது பொறுப்பிலிருந்த போர்க்கைதிகளில் பத்துப்பேரை விடுதலை செய்தார்கள்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மையத்தை நோக்கிய பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக தமது பொறுப்பிலிருந்த போர்க்கைதிகளில் பத்துப்பேரை விடுதலை செய்தார்கள். பதிலுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட அரசியல் கைதிகளில் சிலரையாவது விடுதலை செய்வார்களென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஒருவரும் விடுதலை செய்யப்படவில்லை.

தம்மை விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகள் உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். பூசா தடுப்பு முகாமில் இரண்டு அரசியற் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள். இருவரும் கடந்த 4ம் திகதி இரத்த வாந்தி எடுத்த நிலையில் போராட்டத்தை உறுதியுடன் தொடர்வதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த விடயத்தில் கூட 'புலி'கள் காட்டிய அக்கறையை இலங்கை அரசாங்கம் காட்டவில்லை.


இலங்கை அரசாங்கம் பரஸ்பர நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதில் காட்டும் தயக்கம் சமாதான நடைமுறைகளில் உண்மையான ஆர்வத்தை நம்பிக்கையை, அக்கறையை கொண்டிருக்கவில்லை என்பதைப் புலப்படுத்துவதாக நோக்கர்கள் கருதுகிறார்கள்.

பொருளாதார ரீதியில் இலங்கை அரசு பலவீனப்பட்டிருக்கிறது. படைத்தரப்பும் புதிய இடங்களை கைப்பற்ற முடியாது பலவீனப்பட்ட நிலையில் இருப்பதுடன் கைப்பற்றிய இடங்களைத் தக்க வைப்பதில் கூட கடுமையான சிரமங்களை எதிர்நோக்கி வருகிறது. இதனால் பொருளாதார ரீதியிலும் படைபல ரீதியிலும் தம்மை வலுப்படுத்துவதற்கான கால அவகாசத்தை பெற்றுக்கொள்ள சில அரசு சமாதான பேச்சுவார்த்தை நாடகத்தில் ஈடுபடுவதாகவும் நோக்கர்கள் கருத்து கூறுகிறார்கள்.

இலங்கை அரசு படைக்கு ஆட்களைத்திரட்டுவதுடன், இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்து வருவதாகவும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் குற்றம் சாட்டியுள்ளார். அத்தோடு கிழக்கு பிரதேசத்தில் புதிய காவல் அரண்களை அமைத்து வருவதுடன் படை நிலைகளை மாற்றி வருவதாகவும் தெரிவித்த கரிகாலன் நடைமுறைப்படுத்தப்படாத பொருளாதார தடை அமுல்படுத்தப்படுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். அதாவது இலங்கை அரசின் சமாதான நடைமுறைகளில் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

எந்தவொரு முரண்பாட்டையும் வெற்றிகரமாக தீர்ப்பதற்கு முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தமது நிலைப்பாடுகளில் விட்டுக்கொடுப்புகளை செய்து மையத்தை நோக்கி நகரவேண்டும். மீண்டும் முரண்பாடு ஏற்படாது வெற்றிகரமாக தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட இருசாரார்களில் எவருமே தோல்வியடையக் கூடாது திறந்த மனதோடு விட்டுக்கொடுப்புகளோடு செயற்பட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கே உண்டு.

போரின் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை அடக்க முடியாதென்பதை இலங்கை அரசு அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளது. இதனை பிரதமர்



ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்க உரையிலும் பிரதிபலித்துள்ளார். ஆனால் சர்வதேச சமூகம் என்ற ஆளும் வர்க்கத்திற்கு சவாலாக உள்ள சர்வதேச தீவிரவாதம் (பயங்கரவாதம்) இன்று முக்கிய பிரச்சினையாக உள்ளது.

சர்வதேச (சமுகத்தில்) ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கூடாக விடுதலைப்புலிகளையும் பயங்கரவாதிகளாக்கி அதன் மூலம் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்தலாமென்று சந்திரிகா அம்மையார் கனவு கண்டார்.

அதே அடிப்படையில் பேச்சுவார்த்தையை கால அவகாசமாக பயன்படுத்தி இலங்கை அரசு தன்னை பலப்படுத்தி விட்டு பழைய குருடி கதவைத்திறவடி என்ற பாணியில் செயற்பட முற்பட்டால் இந்த நாட்டை யாரும் காப்பாற்ற முடியாது.

பேச்சுவார்த்தை மையத்தை நோக்கியே பரஸ்பர விட்டுக் கொடுப்புகளை இலங்கை அரசு செய்வதில் தயக்கம் காட்டுவதற்கான ஒரே பலம் நம்பிக்கை தனது படைபலத்திலல்ல பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச சமூகத்தின் உணர்வலைகளேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மேற்குலகப் பெண்ணியம்' தோல்வி கண்டுள்ளதா?

**மேற்குலகப் பெண்ணியம்' தோல்வி கண்டுள்ளதா?**

பல ஆயிரம் வருடங்களாக, பெண்கள் பலவீனம் உடையவர்கள் என்ற ஐதீகம் எங்கும் பரப்பப்பட்டு அந்தத்தன்மையிலேயே அதனை பெண்கள் கூட நம்பி வந்தனர். இந்த ஐதீகமே ஆணாதிக்க சமுதாயத்தின் எழுச்சிக்கு அடிப்படை, பெண்களின் அடிமைத்தனத்திற்கு அடிப்படை. ''ஆண்களின் பாலியல் இச்சையைத் தீர்க்க மட்டுமே பெண்கள் பிறந்தவர்கள்' என்று அவர்களை பகிரங்கமாக காமப் பொருட்களாக மாற்றும் காட்டு மிராண்டித்தனத்திற்கு அடிப்படை.

இந்த ஆண் ஆதிக்கத்தின் அத்திவாரத்தையே நிலைகுலையச் செய்யும் பலத்த அடியைக் கொடுக்க தமிழீழப் பெண்கள் முன் வந்துள்ளார்கள். இந்த அடி, உலகின் அடக்கு முறைச் சக்திகளுக்கூடாக தனது அதிர்வலைகளைச் செலுத்தி உள்ள அதேநேரம், பெண்கள் இயல்பிலேயே பலவீனமானவர்கள் என்ற ஐதீகத்தில் இருந்து அவர்களது அடக்கு முறையாளர்களை விடுவித்துள்ளது.

**விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்கள்.**

தமிழீழப் பெண்கள் எட்டியுள்ள சாதனையானது மனித வரலாற்றிலேயே அடையப்பட்டுள்ள மிக முக்கிய சாதனையாகும். தமிழீழப் பெண்கள் போர்க்களத்தில் சிங்கள ஆண்களுக்கு முகம் கொடுத்து அவர்களைக் கொன்றுகுவிப்பதோடு அல்லாமல் (சிங்கள) ஆண்களைக் கொண்ட ஒரு இராணுவத்தை, தனித்து நின்று எதிர்கொள்கின்றார்கள். தங்களது சொந்த யுத்த தந்திரோபாயங்களைப் பிரயோகிக்கின்றார்கள். தங்களது சுயபலத்தைக் கொண்டு எதிர்த்து நிற்கின்றார்கள். வல்லரசுப் படைகளினால் பயிற்சி அளிக்கப்பெற்ற பலமான ஒரு ஆண் இராணுவத்தை எதிர்த்தவர்கள் இவர்கள். அதிகளவு சுடுதிறன் வழங்கும் ஆயுதங்கள் மற்றும் பீரங்கிப்படகுகள் போன்ற பெரும்படைப்பலங்களை தமது எதிரி கொண்டுள்ளபோதும் வெறும் இலகு இயந்திரத் துப்பாக்கிகளையும் மோட்டார் எறிகணைகளையும் குறுந்தூர டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளையும் கொண்டே இப்பெண்போராளிகள் எதிரியுடன் களமாடுகின்றனர். அதிலும் முக்கியமானது அவர்கள் தற்போது 'பெண்கள் படையணியாக' தனித்து நின்று வெற்றிகளைப் பெற்றுச் சாதனை படைக்கின்றமையாகும்.

இது ஏன் முக்கியமானது? ஆண்களோடு யுத்தம் புரிந்து பெண்களால் வெல்ல முடியும் என்பதை சமூகம் அறிந்தால், பெண்கள இனிவரும் காலங்களில் ஆணுக்கு அடிமையாகவோ, அவனுக்கு அஞ்சியோ வாழ வேண்டிய தேவையேற்படாது. பெண்கள் தாங்கள் பலவீனமானவர்கள் என்ற உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. தாங்கள் இயலாமையுடையவர்கள் என்றோ,புத்தி சாதுரியம் அற்றவர்கள் என்றோ எண்ணிக் கொள்ளத் தேவையில்லை. உடல் ரீதியாக தம்மை ஆட்கொள்வதற்கு ஆண்களை அனுமதிக்க வேண்டிய அவசிய மில்லை. போர்க்களத்தில் தமிழீழப் பெண்கள் அடைந்துள்ள வெற்றிகளின் முழுமையான விளைவுகளினால் தமிழ்ச் சமுகத்திற்குக் கிடைத்துள்ள நன்மைகள் பெருமளவிலானவை. மேற்குலகம் கேள்விப்படாத அனுகூலங்களை இது கொடுத்துள்ளது. முதலாவதாக பெண்களின் அடக்கு முறையின் வேரிற்கே சவால் விடுக்கும் முகமாக, சமூகத்தில் உள்ள பெண்களின் பாதுகாப்பிற்கு இந்த தமிழீழ அமைப்பு முன்னுரிமை அளித்துவருகின்றது. பெண்களின் உடல் ரீதியான பலத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு இளந்தலைமுறைப் பெண்களுக்கு கராத்தே போன்ற தற்காப்புப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், ஆண்களுடனான சம அந்தஸ்த்தைப் பெண்கள் வகிப்பதற்கு தேவையான கட்டுமானத்தை உறுதிசெய்கின்றது. இந்த உடற்பலம் பற்றிய குறைந்தளவு அறிவுகூட ஆண்களினதும், பெண்களினதும் உளவியலில் பெரும் தாக்கத்தை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது. கராத்தேயில் தேர்ச்சியுள்ள பெண்களை பாலியல் பலாத்காரம் செய்யவோ அடிக்கவோ ஆண்கள் தயங்குவார்கள். தங்களைத் தாங்களே உடல் ரீதியாகப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய பெருமளவிலான பெண்கள் சமூகத்தில் உருவாகும்போது பெண்களுக்கு எதிரான வன்முறை அளவுகளில் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

விடுதலை நோக்கிய தமிழீழப் பெண்களின் இந்தக் குறிப்பிடத்தக்க முன்னேற்றப் பாய்ச்சலுக்கு வேறு சில விசேட காரணங்களும் உண்டு. பெண்களுக்கான பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் முகமாக, விபச்சாரமும் ஆபாச இலக்கியங்க



ளும் தமிழீழ விடுதலை இயக்கத்தினால் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. ஆபாச இலக்கியங்கள் எனப்படுபவை வெறும் வியாபாரமே அன்றி வேறில்லை. இங்கு பெண்களின் கவர்ச்சியான மேனிகளும் அவர்களின் ஆபாசமான தோற்றங்களும் பாலியல் பொருட்கள் என்ற பாவனையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விற்பனை ஆகின்றன. இவற்றுக்கு உதாரணமாக நீலப்படங்கள் மற்றும் ஆபாசக் கேளிக்கைக் கூடங்கள் போன்ற வற்றைக் கூறலாம்.

இந்த ஆபாச இலக்கியங்களே பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் என்று மேற்குலகப் பெண்ணியவாதிகளால் அடையாளம் காணப்பட்டபோதும் இந்த ஆபாச இலக்கியங்களின் பெருக்கத்தின் தீவிரத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்த ஆபாச இலக்கியங்களை சட்ட விரோதமாக்குவதற்கு ஆணாதிக்க மற்றும் முதலாளித்துவ நிறுவனங்கள் கடும் எதிப்புடன் சவால் விட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பெண்களை கேலிக்குரியவர்களாக்கி பொதுப்படையாக மானபங்கப் படுத்துகின்றனர். இன்றைய மேற்குலகப் பெண்ணியவாதிகளின் நிலைமை ஒன்றில் அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. அல்லது வலிமையற்றதாக்கப்பட்டிருக்கின்றது. தமிழீழத்தில் இவற்றின் மீது விதிக்கப்பட்ட தடையானது மனித ஜீவன்கள் என்ற ரீதியில் பெண்களுக்கான இயல்பான மரியாதையை வழங்குவதற்கான ஆரம்பத்திற்கு உதவியுள்ளது. தமிழீழத்தில் இல்லாதொழிக்கப்பட்டுள்ள 'விபச்சாரம்' அதாவது பாலியல் நோக்கத்திற்காக உடலை விற்கின்ற செயலானது, மேற்கு நாடுகளில் தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. பெண்களின் பாலியல் அடிமைத்தனத்தின் நேரடி விளைவு இதுவாகும். வெறும் நுகர்வுப் பொருள் என்ற வகையில் பெண்களின் உடல்கள் வாங்குவதும் விற்பதும் போன்ற இழிவுச் செயற்பாடுகளுக்கு உள்ளாகின்றன.

**மேற்குலகப் பெண்களின் 'பெண்விடுதலை'**

மேலைத்தேய சமூகங்களில் பெண்ணிய அமைப்புக்களினதும் பெண் ஆய்வாளர்களினதும் பெண் அரசியல் வாதிகளினதும் பெருக்கம் அதிகமாகியிருக்கின்ற போதிலும், பெண்விடுதலை என்பது இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னிருந்த நிலையைவிட பின் நோக்கியே சென்றுள்ளது. இங்கு பெண்ணியம் என்பது சுயம் சார்ந்த பாதைவழியே சென்றுள்ளதுடன், தனிப்பட்ட தன்மையை உடையதாகவே விளங்குகின்றது. அதாவது இங்கு பெண்விடுதலை என்பது பெண்கள் தாங்கள் விரும்பும் எந்தப் பொருளையும் அவை உடனடிச் சந்தோசம் தரும் பட்சத்தில், அவை எவ்வளவு பிரயோசனம் அற்றவை என்றாலும் அவற்றை கொள்வனவு செய்வதற்காக சுதந்திரம் என்றும், தங்கள் உடல்களைப் போதைப்பொருள் பாவனைக்கும், புகையிலை மற்றும் மதுபானபாவனைக்கும் உள்ளாக்கி வருத்திக் கொள்வதற்குமான சுதந்திரம் என்றும்,தாங்கள் விரும்பும் அளவிற்கு தங்கள் இஷ்டத்திற்கு பாலியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் சுதந்திரம் என்றும் பிரபலப்படுத்திக் கொள்கின்றனர். இந்த 'சுதந்திரங்கள்' மிகவும் தனித்து விடப்பட்டதும், அன்னியதுமான வாழ்க்கையை பெருமளவிலான பெண்கள் வாழ்வதற்கு வழிகோலும் பாதைக்கு இட்டுச் செல்கின்றன. அங்கு வாழும் பெண்களில் காணப்படும் இம் மாற்றமானது மிகவும் ஆழமான அறிவு கொண்டதாயிருக்கின்றது. ஆனால், விடுதலை பெற்றுத்தரக்கூடிய தொன்றாகக் காணப்படவில்லை. ஏனெனில் ஒரு காலத்தில் தந்தையர்களாலோ, சகோதரர்களாலோ அடிமையாகக் கொள்ளப்பட்டவர்கள் தற்போது தொழில் நிறுவனங்களில் இலாபத்தைப் பெற்றுத்தரும் வியாபரப் பொருட்களாக இருக்கின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறைக் குற்றங்கள் அதிகரிக்கின்றனவேயொழிய குறையவில்லை. அது மட்டுமல்லாமல் ஒரு பெண் நன்னடத்தை கொண்டவள் என்றாலும் அதற்கான மதிப்பை தன் சொந்த சகோதரர்களிடமிருந்துகூடப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. இதற்குச் சான்றாக குடும்பத்தில் நடைபெறும் சாதாரண சச்சரவுகளின் போது பெண்ணை பாலியல் ரீதியாக இழிவுபடுத்தி அவளைப் பொதுவில் அவமானப்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களைக் கூறலாம்.

**மேலைத் தேய பெண்ணியத்திற்கு தோல்வியே!**

பெண்ணியம் அல்லது பெண்விடுதலை என்ற சொற்களின் நிறைவான கருத்தை மேற்குலகப் பெண்ணியம் கொண்டிருக்கவில்லை என்பதே நாம் எடுத்துள்ள முடிவு. அதாவது, பெண்களின் விடுதலைக்கு ஒரு பலமான அத்திவாரத்தைக் கட்டியெழுப்புவதில் மேற்குலகப் பெண்ணியவாதிகள் தோற்றமைக்கானகாரணம் இங்கு ஆயுதம் தாங்கிப் போராடும் ஒரு பெண் விடுதலை அமைப்பு காணப்படாமையே என்று வெளிப்படையாகக் கூறலாம்.

இருந்தபோதும், இந்த ஆணாதிக்க முறைமையினுள் உள்வாங்கப்படுவதற்கு நாம் பலவந்தப்படுத்தப்படுகின்றோம். என்ற ஐதீகத்தை பரப்பும், குடியேற்றநாட்டவர் என்ற போக்கைக் கொண்ட இவர்களை இது தடுக்கவில்லை. இங்குள்ள இவர்களுடைய சகாக்கள் 'கொழும்புப் பெண்ணியவாதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். பெண்ணியவாதிகள் என்று அழைக்கப்படும் இவர்கள் ஆணாதிக்கம் நிறைந்த குடியேற்றவாதக் கல்வியையே பெற்றுக் கொண்டுள்ளார்கள். (அதிகாரத்தின் மூலமும் விளம்பரப்படுத்தல் மூலமும்) அதேநேரம் இங்குள்ள பெண்களின் நிலைபற்றி பொருத்தப்பாடான தகுந்த சிந்தனைகள் எதனையும் கொண்டவர்களாக இல்லாமல் தோல்விகாணும் மேலைத்தேய பெண்ணியத்தின் போக்கை பிரதிபண்ணுபவர்களாகவே உள்ளனர்.

சேர்ந்தியங்கும் தத்துவத்தின் ஒரு பகுதியாக, வல்லாதிக்கத்தின் ஒரு பகுதியாக தங்களைத் தாங்களே இவர்கள் மாற்றிக் கொண்டுள்ளார்கள். அத்துடன், தமிழீழப் பெண்போராளிகளைச் சிறுமையாக்கி அவர்களைத் திசைதிருப்பும் பயற்சிகளை செய்யத் தலைப்படுகின்றார்கள் இந்தக் கொழும்புப் பெண்ணியவாதிகள். இவர்களுக்கு சரியான உதாரணம் ராதிகா குமாரசுவாமி, தமிழீழப் பெண்களுக்கு எதிராக சிறிலங்கா இராணுவம் இழைக்கும் கொடுமைகளைப் பற்றியும் அநீதிகளைப் பற்றியும் இவர்கள் பாராமுகமாகவே உள்ளனர். அதே நேரம் அப்படியான இராணுவத்தை எதிர்த்து நின்று துணிவுடன் போர் புரியும் பெண்களைப் பற்றி விமர்சனம் செய்கின்றனர். ஆணாதிக்கத்தின் கூட்டாளி என்பதற்கு ராதிகா குமாரசுவாமி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஏனெனில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப் பட்ட விசேட நிருபர் இவர், ஆனால், உண்மை இதுதான். உலகின் மிகவும் கொடுமையான வன்முறைகள் மேற்கொள்ளப்படும் நாடுகளில் இருந்து வந்த இவர் பெண்களுக்கு எதிராக மோசமான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் அதே அரசின் ஆதரவைப் பெறுகின்றார். வெற்றிகரமான விதத்தில் உண்மைகளை மூடிமறைத்து தன்னைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்யும் இவர் இவ்விடயம் தொடர்பாக



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

உலகின் கவனத்தை ஈர்க்கச் செய்வதில் தொலைவில் இருக்கின்றமை ஆச்சரியப்படுவதற்கில்லை.

**முடிவு**

தமிழீழப் பெண்களாகிய நாம் அடிமைத் தளையிலிருந்து மீண்டுகொள்ள ஆயுதப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். எமது இந்த முயற்சிகள் பலவகையிலும், கொழும்பு பெண்ணியவாதிகளால் தடுக்கப்பட்டபோதும்,விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டபோதும் வேறுபல நாடுகள் தோல்விகண்ட இப்பாதையில் வெற்றிநடை போடுகின்றோம். நமது அமைப்பில் உள்ள பெண்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையும், அமைப்பிற்குள்ளேயும் வெளியேயும் உள்ள ஆண்களின் ஒத்துழைப்பும் நாம் வெற்றியடைகின்றோம் என்பதற்கு சான்றுகளாகும். அத்துடன் தமிழீழத்தின் ஆண்கள் தமது சகோதரிகள் போன்றே அன்புடனும் மரியாதையுடனும் பெண்களை நோக்குகின்றனர். இது ஆணாதிக்க சமுதாயத்தை குறிப்பிட்டளவு மாற்றிய மைத்துள்ளமைக்கு அத்தாட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயை நிகர் தாயகத்தைக் காதல் செய்க

பெப்ருவரி 14 ஆம் திகதி "உலக காதலர் தினம்" ஆக இன்று இலங்கைத் தீவையும் ஆட்கொண்டு நிற்கிறது. வேக நடைபோடும் உலக மயமாக்கலின் விளைவாக வியாபித்து விஸ்வருபமெடுக்கும் "நுகர்வுப்பண்பாடு" மூலம் இத் தினங்களைப் பிரபல்யப்படுத்துவதன் ஊடாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சந்தைகளை ஆக்கிரமிப்பதை ஏகாதிபத்தியங்கள் இலகுவாக்கின்றன.

மேற்போந்த கண்மூடித்தனமான நுகர்வுப் பண்பாடு தமிழர் தாயகத்தின் சிறிலங்காப் படைத்துறை கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அகலக் கால்பரப்புவதையிட்டு சமூக முன்னோடிகள் அக்கறை செலுத்துவது அவசியமாகிறது.

விடுதலைக்காகப் போராடும் தேசத்தவர்களாகிய நாம் எமது தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுக்க வேண்டியவர்களாக இருப்பதுடன், எதிரியினதும் அவனின் நட்பு சக்திகளினதும் பண்பாட்டு ஊடுருவல் ஆக்கிரமிப்பைத் தீர்க்கமாக முறியடித்து அவனை மூக்குடைய வைக்கவும் வேண்டியிருக்கிறது.

**கோ.துரைகுமாரன்**

வெறும் உடல் கவர்ச்சியை மட்டுமே கருத்திற் கொண்ட "விலங்கு நடத்தை" யிலிருந்து விலத்தி அறிவு பூர்வமான உள ஈடுபாட்டை வளர்த்தெடுக்கவல்ல பகுத்தறிவான காதலைப் பேணுவதே பொருத்தமாகும். எங்களின் காதல் வெறும் சில்லறைத்தனங்களுடன் முடிந்திடாது, வரலாற்றில் இடம் பெறவல்லதாக ஒன்றிணைந்து தேசப்பணியாற்றுவதும் காலத்தின் தேவையாகிறது. எங்கள் தேசக் கவிஞன் புதுவை இரத்தினதுரை கூறியது போல "தாயை நிகர் எங்கள் தாயகத்தைக் காதல் செய்க" என்பதே ஆண்டு முழுவதும், ஒவ்வொரு நாளும் காதலர்தின மறைவாக்கு ஆக அமையட்டும்,

வரலாற்றைப் புதிதாகப் படைத்துக் கொண்டிருக்கும் எம் தேசம் விடுதலைக்காக செலுத் திய விலை ஏராளம். இன்று – குறிப்பாக வன்னி

## எழுச்சிக்குரல்

'ஜெயசிக்குறுய்' எதிர்ச்சமரின் பின்பாக – தேசம் தழுவிய மக்கள் எழுச்சி "திருவயிற்றுத் தியாகங்கள்" பலவற்றைப் படைப் பதுடன், காதலன், காதலி, கணவன், மனைவி, முழுக்குடும்பம் என முழுமையான "மக்கள் போர்" ஆக பரிணமித்திருப்பது எதிரியைப் பேச்சுவார்த்தை நோக்கித் தள்ளியுள்ளது. இவ்வகையில் "எல்லை காக்கும் இல்லங்கள்" ஆக பெருமைக்குரிய எல்லைப் படையினரின் செயற்பாடுகள் அமைவதைத் தரிசிக்க முடிகிறது. காதலித்து மணம்முடித்து வந்துதித்த பிள்ளைக்கு சோறூட்ட முன்னம் "களம் சென்று வருகிறேன்" என்று காதல் மனைவியிடம் விடை பெற்றவன் வித்துடலாகி வந்து அந்தக் கரத்தைக் கொண்டே பிள்ளைக்கு சோறூட்டிய காதல் மனைவி... என எண்ணற்ற காதல்கள் இன்றெம் தேசத்தில் தாயகக் காதல்கள் ஆகப் பரிணமித்து உயர்வடைகின்றன. "காதலர் தினம்" என்று காதலுக்கு நாள் வரையறுக்கப்படுகிற நிலையில். தாயக விடுதலைச் சிந்தனை பொருந்திய ஒரு சிநேகிதிக்கு சிநேகிதன் எழுதிய கவிதை இவ்வார "எழுச்சிக்குரல்" ஆக எழுகின்றது. "சுவர்!" இல் நா.சபேசன் எழுதிய "ஒரு சிநேகிதிக்கு எழுதியது..." என்ற இக் கவிதை உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாபஐயர். மயிலங்கூடலூர் பி.நடராசன் ஆகியோரைத் தொகுப்பாளராகக் கொண்டு வெளியான "மரணத்துள் வாழ்வோம்" (இரண்டாம் பதிப்பு – 1996) ஈழத்துக் கவிதைகள் தொகுப்பிலிருந்து இங்கு இடம் பெறுகிறது.

**"என்னரும் சிநேகிதி,
உன்னை 'அவர்கள்'
உதைத்தனரா
காக்கிகள் போட்ட காவற் கூட்டம்.**

**'இனமத பேதமற்று இன்று
உண்ணா விரதம்'
பத்திரிகையில் படித்து தெரிந்து கொண்டேன்
நீயும் அங்கிருப்பாய் என்றும் நினைத்தேன்.**

**வயல்கள் நிறையும் கிராமத் தெருக்களில்
சைக்கிளில் திரியும்
உனது நினைவு சந்தோஷமளிக்கும் எனக்கு
ரியூஷனுக்கு செல்லும் பெண்களை,
ஒழுங்கை முடக்குகளில்
காதலர்களோடு நின்று சல்லாபிக்கும்
உன் வயதுப் பெண்களை காண நேர்கையில்
என்னரும் சிநேகிதி
உனது நினைவு பிரமிப்பாகும்.**

**'எல்லோரும் படித்தால்
என்னரும் மக்களை, தங்களைப் பற்றியே
தெரியாதிருக்கும், எங்கள் பெண்களை
உணரச் செய்வது யாராம்?'
அன்றொருக்கால் என்னைக் கேட்டாய்
யாழ்ப்பாணத்தில்.**

**திரும்பவும் உனைக் கண்டது
கிராமத்திலே தான்
என்னரும் மக்களை, தங்களைப் பற்றியே
தெரியாதிருக்கும் எங்கள் பெண்களை
தட்டியெழுப்பும் உன்னைக் கண்டேன்.**

**ஒரு சைக்கிள் போதுமுனக்கு
எமது மக்களை தட்டியெழுப்ப.
ஊரிலிருந்து நீ கொணர்ந்ததும் இவைதான்
செருப்பு,
ஒரு சைக்கிள்,
புத்தகங்கள் கொஞ்சம்,
இரண்டு சோடி உடுப்புகள்.**

**என்னரும் சிநேகிதி
இன்றுதான் ஒருவர் சொன்னாரிதனை
கண்ணீர்ப்புகையின் பின்னர்
உனது கூந்தலை பிடித்து உதைத்தனராம்**

**கண்ணீர்ப் புகைகளும்
குண்டாந்தடிகளும்.
உன்னை இன்னும் வளர்க்கும் என்பதை
அவர்கள் அறியார்!"**

# நொந்து போயிருக்கும் தமிழர்களுக்கு உள்ளூராட்சி சபை தேர்தல் எதற்காக?

(சென்றவாரத் தொடர்ச்சி....)

**1994ல்** உள்ளூராட்சி சபைகளின் தேர்தலுக்காக அரசு அறிவித்தல் கொடுத்தது. வடக்கு கிழக்கு உறைந்து போயிருந்த நிலையில் தேர்தலில் மக்கள் அவ்வளவாக அக்கறை கொள்ளவில்லை. கேவலப்பட்டுப் போயிருக்கும் தமிழர்களுக்குத் தேர்தல் எதற்காக என்ற மனோநிலையே பரவலாகக் காணப்பட்டது. ஈரோஸ் சிதைந்து காணாமற் போயிருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் அக்கறை இல்லாமல் இருந்தது. அதன் தலைவர்களும் அப்போது திருகோணமலை மண்ணில் மீளக் காலூன்றாத காலம்.

தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ திருகோணமலை நகர சபையைத் தமிழர்களின் ஆதிக்கத்திலிருந்து விட்டுவிடக்கூடாது என்ற அக்கறையுடன் தேர்தலை எதிர்கொள்ள ஆயத்தமானது நகர மக்களின் அபிப்பிராயங்களைத் திரட்டுவதில் மும்முரமாகச் செயற்பட்டது. இதன் உச்சமாக நகரத்துப் பிரமுகர்களை அழைத்து கூட்டுறவுச் சபை மண்டபத்தில் ஒரு கலந்துரையாடலை நடத்தியது. இதற்கு சிவாஜிலிங்கம் உட்பட ரெலோ முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்தனர். சிவாஜிலிங்கம் தேர்தலில் போட்டியிட வேண்டியதன் அவசியத்தை

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்



விளக்கிப் பேசியதுடன், சுயேச்சைக் குழுவொன்றைத் தெரிவுசெய்து போட்டியிட வைக்குமாறும், அதற்கான பண உதவி, ஆளணி உதவி என்பவற்றை ரெலோ வழங்கும் எனவும் அறிவித்ததோடு, வேட்பாளர்கள் விரும்பினால் மட்டுமே இவ்வுதவிகள் செய்யப்படும் என்றும், அதற்காக வேட்பாளர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ரெலோவுக்கு கடமைப்பட்டவாகளாகவோ, கட்டுப்பட்டவர்களாகவோ இருக்கவேண்டியதில்லை என்றும் தெளிவாக அறிவித்தார். உடனடியாக வேட்பாளர் குழுவொன்று தெரிவானது. இ.சோமசுந்தரம் என்பவர் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட 16 பேர் கொண்ட குழுவில் அவனும் ஒருவனாக அடக்கப்பட்டிருந்தான்.

வேட்பாளர்களுக்காக சிவாஜிலிங்கம் விஷேட உரை நிகழ்த்தி உற்சாகப்படுத்தினார். அவனுட்பட அநேகமான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்குத் துணியாதவர்களாகவே காணப்பட்டனர். சிவாஜிலிங்கம் முன்வைத்த நியாயங்கள் எல்லாம் இக் குழுவினரின் ஆர்வமின்மை காரணமாக பயனற்ற நிலையிலேயே காணப்பட்டது. வேட்பாளர் குழு தமக்குள் ஒரு கலந்துரையாடலை நடத்த விரும்புவதாக இ.சோமசுந்தரம் தெரிவித்ததையடுத்து கூட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு வேட்பாளர் கலந்துரையாடலுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. "நீங்கள் சரியாகவும் துணிவாகவும் முடிவெடுப்பீர் என்று எதிர்பார்கிறேன்" என்று கூறிவிட்டு சிவாஜிலிங்கம் சென்று விட்டார்.

**அருண்**

வேட்பாளர் குழு சோமசுந்தரம் தலைமையில் கூடியது. சிவாஜிலிங் கம் கூறிய நியாயங்களும், நிலைப்பாடும் வாதத்துக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் ஆயுதக் கட்சியான ரெலோ வேட்பாளர்களை மெல்ல மெல்லக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வராது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்ற கேள்வி முதலாவதாக முன் வைக்கப்பட்டு ஆராயப்பட்டது. ரெலோ அமைப்பினர் அவ்வாறு நடந்து கொள்ள மாட்டார்கள் என்று எவராலும் வார்த்தைக்குத் தானும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இரண்டாவதாக தேர்தல் இப்போது நடப்பது உசிதமானதா? அதில் நொந்து போயிருக்கும் தமிழர்கள் பங்கு கொள்வது சரியானதாகுமா என ஆராயப்பட்டது. முடிவாக தேர்தலில் பங்கு கொள்வதில்லை என்று அந்தக் குழு முடிவு செய்து கொண்டது. இந்த முடிவுக்குக் குழு உறுப்பினர்கள் வருவதற்கு மேற்கண்ட காரணங்கள் வெளிப்படையாக வைக்கப்பட்டு ஆராயப்பட்ட போதிலும். விடுதலைப் புலிகளின் விருப்பமின்மை என்ற ஒரே காரணம் தான் எல்லோர் மனத்திலும் மௌனமாக இருந்தது. இத்தகைய முடிவுக்கு இட்டுச் சென்றது என்பது வெளியில் சொல்லப்படாத உண்மையாக இருந்தது.

[illegible] மூலம் ரெலோவுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த முடிவு பிற்சந்தர்ப்பங்களில் "தக்கதருணத்தில் முன்வரத் துணிவற்ற பேர்வழிகள்" என்று ரெலோ அமைப்பைச் சார்ந்தவர்கள் இந்தக் குழுவினர் பற்றி அவ்வப்போது குத்திக் காட்ட வாய்ப்பளித்தது. ரெலோவின் பார்வையில் அது மிகச் சரியாகவும் இருந்தது. ரெலோவினர் இந்தக் குழுவின் முடிவால் தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. திறமையானவர்கள் 'இல்லாவிட்டாற்கூட யாரைப் போட்டாவது தேர்தலில் வென்றே தீருவது என்ற செயற்பட்டார்கள். ஆள் தேடும் படலம் ஆரம்பமாகியது.

பெ.சூரியமூர்த்தி முதன்மை வேட்பாளராக ரெலோவினால் தெரிவு செய்யப்பட்டார். அவரோடு ரெலோவின் உள்ளூர்த் தலைவர்களும் உறுப்பினர்களும் வேறு சிலரும் இணைந்து பட்டியல் தயாரிக்கப்பட்டது.ரெலோவின் திருகோணமலைப் பொறுப்பாளர் லிங்கராசா சூரியமூர்த்தியையும் அழைத்துக் கொண்டு ஒரு நாள் அவனுடைய வீட்டுக்கு எதிர்பாராத விதமாக வந்தார். "அண்ணே இவர்தான் எங்கள் முதன்மை வேட்பாளர்" என்று அறிமுகப் படுத்தி வைத்தார். அவனுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. அல்வாயைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சூரிய மூர்த்தி திருக்கோணமலையில் சில ஆண்டு காலம் படித்ததாக அவனுக்கு ஞாபகம். ஆரம்ப நாட்களில் தமி ழரசுக் கட்சிக்காரனாக சூரியமூர்த்தியை அவன் கண்டிருக்கிறான். பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணித் தொண்டனாகச் சந்தித்திருக்கிறான். ஆனந்த சங்கரி அவர்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தவர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறான். பின்னாளில் ஈ.என்.டி.எல்.எவ் மாகாண சபை உறுப்பினராகச் சந்தித்து உரையாடியிருக்கிறான். அதன்பிறகு ஒரிஸாவுக்கு ஓடிச் சென்றவர் நொந்துபோய் வந்திருந்ததைக் கண்டு ஆறுதல் கூறியிருக்கிறான்.

"நீங்கள் எப்படி இவர்களுடன் சேர்ந்தீர்கள்? என்று அவன் சூரியமூர்த்தியைப் பார்த்து நேராகவே கேட்டான். மெல்லிய சிரிப்பை உதிர்த்த சூரியமூர்த்தி "என்னில் ஒன்றுமில்லை. அப்போது அவர்கள் நினைத்தார்கள். ஏற்றுக்கொண்டேன. இப்போது இவர்கள் நினைக்கிறார்கள். ஏற்றுக் கொள்கிறேன். என்று சாதாரணமாகவே பதில் சொன்னார். கட்சிமாறும் குணத்தை தைரியமாக நாசுககாக வெளிப்படுத்தியமை கண்டு அவன் வியந்து போனான். பல விஷயங்கள் பேசிவிட்டு அவர்கள் போனார்கள். இடையிடையே லிங்கராஜா தேர்தலில் போட்டியிட நீங்களும் பின் வாங்கி விட்டீர்கள் என்று மறை முகக் கோடிட்டு காட்டத் தவறவில்லை. இரண்டொரு நாட்சள் கழித்து ஈ.பி.டீ.பி.யின் மாவட்டப் பொறுப் பாளர் துஷ்யந்தன் அவனைத் தேடி வந்தார். தாங்களும் நகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கூறி பீட்டர் என்பவரை முதன்மை வேட்பாளராகத் தேர்வு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பீட்டர் நகராட்சி மன்றத்தில் உத்தியோகத்தராக பணி புரிந்தவர். நிர்வாகத்தின் நெழிவு சுழிவுகளை நன்கறிந்தவர். பின்னாளில் ஈ.பி.டி.பியில் இணைந்து அவர்களுக்கு உதவியாளராக இருந்தவர். இந்தவகையில் அவர் தேர்வு செய்யப்பட்டிருந்தார். எனினும் பீட்டர் பற்றி ஊர்மக்களிடம் நல்லபிப்பிராயம் குறைவாகவே காணப்பட்டது. அவன் தனிப்பட்ட முறையில் கூட பீட்டரில் நல்லபிப்பிராயம் கொண்டிருக்காத போதிலும் ஈ.பி.டி.பி பற்றி அப்போது நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தான். தொண்ணூறில் தமிழர்கள் கொழும்மில் நிர்க் கதியான போது அவர்கள் ஆற்றிய மனிதாபிமான சேவை பற்றிய உயர்வான எண்ணம் இன்றுவரை அவன் மனதை விட்டகலவில்லை. சரஸ்வதி மண்டபத்தில் அவர்கள் முகாம் நடத்திய பாங்கும் மக்களோடு கொண்டிருந்த உறவும் சிறப்பாக இருந்தமை அவன் நேரில் சென்றபோதும் அனுபவரீதியாக அறிந்திருந்தான். அது. தமிழருக்கு காலத்தினாற் செய்த பேருதவியாகவே இன்றுவரை கருதுகிறான். அதுவுமல்லாமல் திருகோணமலை மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பினர் மக்களிடம் மரியாதை குறைவாகவேனும் நடந்து கெண்டதாகவும் அவன் அறியவில்லை. இவை காரணமாக ஈ.பி.டிபி மேல் மரியாதை கொண்டிருந்தபோதிலும் அரசியல் ரீதியாக அவர்களது கொள்கையை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.


**(அடுத்தவாரம் தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தின் சரணாலயம் சிறார்கள் அவர்களின் சரணாலயம் எங்கே?

## 50 சிறார்களைப் பராமரிக்கும் வை.எம்.சி.ஏ. நிறுவனத்தினரின் "வாழ்வோசை" பாடசாலை.

பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள் எனக் கூறப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை இப்பகுதியில் வாழும் பிள்ளைகளின், உடல், உள, உணர்வார்ந்த ஒழுக்க, விவேக, சமூக, ஆத்மார்த்த வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள உறவுகள் இலங்கையின் இனப் பிரச்சினையால் தறிகெட்டுப்



போனமையால் இங்கு வாழும் பிள்ளைகளின் நிலை தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்லாமல் முழுச் சமுதாயத்தையுமே நாசமாக்கியுள்ளது.

ஆயினும் இதைவிட பாரதூரமான உரிமை மீறல் பிள்ளையின் பாலப்பருவத்தையே பறித்தெடுப்பதாகும். பெரியவர்களாகி வாழ்க்கையின் பொறுப்புகளாலும், சுமைகளாலும் நசுக்குவதற்கு முற்பட்ட வளர்ச்சிக்காலமே பாலப் பருவம். பாலப்பருவ அனுபவங்களே வளர்ந்த பின் எமது குண இயல்புகளை நிர்ணயிப்பதாகும்.

18 வயதிற்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளையாவர். இவர்கள் சகல உரிமைகளையும் அனுபவிப்பதற்கு வழிவகை செய்து கொடுக்கப்பட வேண்டும். எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்களின் வயது, பால், ஊனம், நிறம், சாதி, மொழி அல்லது மதம் ஆகிய காரணிகளால் அவர்களிடையே பாகுபாடுகள் காட்டக்கூடாது. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட அறிக்கை அரசாங்கம் பிள்ளைகளை எல்லா வகையான பாகுபாடுகளிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதுடன் அவர்களின் உரிமைகளைப் பரப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகிறது.

சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஊனம் உள்ளவர்களைக் காக்க வேண்



டும் என அரச சார்பான நிறுவனங்கள் அறிக்கைகளை வெளியிடுவதில் பின் நிற்பதில்லை.

ஆனால் நமது பிரதேசத்தில் செவிப்புலன் அற்றோர், வாய் பேச முடியாதோர், ஊனமுற்றோர்களை தங்களைப் போன்ற மனிதர்களாக சிந்தித்து, அவர்களை கவனிப்பதில்லை. படித்தவர்கள் குறைபாடுகளில்லாமல் படைக்கப்பட்ட சிலர் உடல், உளப், பலவீனமுற்றவர்களைக் கண்டால் கிண்டலடித்தும், கேலி செய்தும் சிரித்து மகிழும் பல சந்தர்ப்பங்களை நாம் அன்றாடம் நேரில் பார்க்கிறோம்.

இவ்வாறான நிலையில் குறித்த ஆணோ, பெண்ணோ, இளைஞனோ, யுவதியோ, சிறார்களோ அந்த ஒரு நிமிடத்தில் அவர்களது மாற்றங்களும் உள்ளக் குமுறல்களும் எப்படியிருக்கும்? அவை




வாழ்வோசை பாடசாலையை வழிநடத்தும் மட்டு.வை.எம்.சி.ஏயின் பொதுச் செயலாளர் D.D.டேவிட் அவர்களுடன் நிர்வாகத்தினர்.

அவர்களது எதிர்கால வாழ்வில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதையெல்லாம் அவர்கள் சிந்தித்துப்பார்ப்பதே இல்லை.

இவ்வாறு, உடல், உளப் பல வீனங்களுக்கு உட்பட்டவர்களையும், பலவீனங்களுக்கு உட்பட்ட ஒரே காரணத்திற்காக தங்களது குடும்பத்தினரால் அந்நியப் படுத்தப்பட்ட குழந்[illegible] ஒன்று சேர்த்து ஆதர[illegible]

நல்ல தாயைப் போல தேவையறிந்து சேவையாற்றி வருகிறது. மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ இயக்கமான வை.எம்.சீ.ஏ.

"சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாய்பேச முடியாத, காது கேட்காத 50 பிள்ளைகளை மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ நிறுவனத்தினரால் நடாத்தப்பட்டு வருகின்ற "வாழ்வோசை" என்கின்ற பாடசாலையின் மூலம் ஆதரவளித்து வருகின்றனர்.

உடல், உள, ஆன்ம வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் நேரடியாக பல நிகழ்ச்சித் திட்டங்களை வை.எம்.சீ.ஏ தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. இலங்கையில் 37 வை.எம்.சி.ஏ அமைப்புக்கள் காணப்பட்டாலும் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ நிறுவனம் மட்டுமே மட்டக்களப்பு திருமலை வீதியில் அமைந்துள்ள "வாழ்வோசை" என்னும் செவிப்புலன் அற்ற வாய்பேச முடியாத சிறுவர்களுக்கான பாடசாலையை கடந்த 1999 மே மாதம் 10 ஆம் திகதியன்று ஆரம்பித்து இன்றுவரை நடாத்தி வருகிறது.

4 முஸ்லிம் மாணவர்களும், 46 தமிழ் மாணவர்களும் ஏனைய சாதாரண மாணவர்களைப்

**க.ஜெகதீஸ்வரன்**

போல 8 பாடங்களையும் 'சைகை" மொழி மூலம் கற்று வருகின்றனர்.

இவர்களுக்கான "சைகை மொழி" மூலமான போதனைகளை க.பொ.தராதர உயர்தர வகுப்பில் சித்தியடைந்த 6 மாணவர்களே ஆசிரியர்களாக நியமனம் பெற்று 8 பாடங்களுக்குமான போதனைகளையும் (Sign Language) மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களில் 2 ஆசிரியர்கள் சைகை மூலமாகப் போதிப்பது எப்படி என்று 3 மாத பயிற்சியை இந்தியாவில் படித்தவர்கள், ஏனையவர்கள் மொறட்டுவ சர்வோதய பாடசாலையில் பயிற்சி பெற்றவர்களாவர்.

காது கேட்க முடியாத, வாய்பேச முடியாத இம் மாணவர்[illegible] [illegible] ஏனைய புற கிருத்தியங்களிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். சாதாரண மாணவர்களைப் போல விளையாட்டுக்களிலும், ஈடுபட்டு வருவதோடு ஏனைய நேரங்களில் பிரம்பை மூலப் பொருட்களாகக் கொண்ட



உற்பத்திப் பொருள்களைச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்க விஷேட அம்சமாகும்.

அத்தோடு சித்திரம் வரைதல், ஸ்கிறீன் பெயின்டிங், பூ வேலைகள், விஷேட தினங்களில் உறவினர்களுக்கு அனுப்பப்படும் வாழ்த்துமடல் தயாரிப்பு, கடித உறை தயாரித்தல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இம் மாணவர்களுக்கான பாடசாலை, பல மாணவர்களுக்கான விடுதி வசதிகள் எல்லாமே ஒரு வாடகைக் கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

மேற்படி மாணவர்களுக்கான உணவு, உடை, உறையுள் வசதிகள் எல்லாமே வை.எம்.சீ.ஏ அமைப்பாலேயே வழங்கப்பட்டு வருகிறது. இம் மாணவர்கள் அனைவரையும் பாராமரிப்பதற்கு வருடம் தோறும் 11 லட்சம் தேவைப்படுகிறதாம். ஆனால். "Hope For Children" என்ற அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று மட்டுமே வருடந்தோறும் 5 லட்சம் ரூபாவை வழங்கிவருவதையும், உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வாழும் சிலரது அன்பளிப்புக்களும் கிடைப்பதை பெருமையோடு சுட்டிக் காட்டுகிறார் வை.எம்.சி.ஏ.யின் பொதுச் செயலாளர் D.D டேவிட்.


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் செவிப்புலனற்ற, வாய் பேச முடியாதவர்கள் 225 பேருக்கு அதிகமாக உள்ளனர். இவ்வாறானவர்களை பலர் துன்புறுத்தி, பகிடி பண்ணுதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை திருகோணமலையில் இவ்வாறானவர்களைப் பேணும் இல்லம் ஒன்று இருக்கிறது. அதைவிட கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரேயொரு பாடசாலையும் இதுதான். இதனை சிறப்பாக நடாத்த வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார் டேவிட்.


மேலும் இம் மாணவர்களும் ஏனைய மாணவர்களைப் போல க.பொ.த சாதாரண தரம் உயர்தரம், பட்டப்படிப்புக்களை மேற்கொள்ள சைகைமொழி மூலமாக போதனை மேற்கொள்ளவும், கணினிப் பயிற்சிகளை வழங்கவும் திட்டங்கள் உண்டு. இவையெல்லாவற்றையும் திறம்பட, வெற்றிகரமாக நடத்த வேண்டுமானால் நிதி மூலங்கள் வேண்டும். அத்தோடு பொது மக்களின் உதவிகளும் ஆதரவும் அவசியம் என்கிறார்.

பாடசாலைக்கான பணத்தைப் பெற பல வழிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும் ஆக்கபூர்வமான உதவிகள் கிடைப்பதாய் இல்லை. எனவே அரச சார்பான, சார்பற்ற பண வசதி படைத்தவர்களின் உதவியை எதிர்பார்க்கிறோம். கிடைத்தால் மேலும் சிறப்பாக பணியாற்ற வை.எம்.சி.ஏ.யின் உறுப்பினர்கள் தயாராய் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு சாளரம்

-பகீ-



# "நல்ல நட்பு கோடி பெறும்"

## நட்பை வளர்ப்பது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி...)

தனக்கு நண்பர் நண்பிகள், இல்லையென வருந்துவோர் சிலர். தனக்கு நண்பராக வருகிறவர் விலகிவிடுகின்றனர் என ஏமாற்றமடைவோர் சிலர். நட்பை வளர்த்துக்கொள்ள தன்னால் முடியவில்லை என [illegible] சிலர். நட்பை வளர்க்க தேடுகின்றாயா?

◆ நண்பன் ஒருவன் உன்னைத் தேடி வரவேண்டும் எனக் காத்திராதே! நட்புடன் [illegible] நீ முன்வரமுடியும். நீ நண்பனாக மாறு. உன்னை [illegible]னாகக் கொள்ள ஒரு சிலர் காத்திருக்கலாம்.

◆ உன் நண்பன் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறாயா? உன் நண்பனிடமும் அதே ஆவல் உண்டு. அவன் பேசுவதை கேட்க செவி கொடு. உரையாடும் போது அவனிடம் என்ன உணர்வுகள் உள்ளன என்பதைப் புரிந்து கொள்ளத் தேடு.

◆ நீ ஆர்வம் கொள்பவற்றில் உன் நண்பனும் அக்கறை காட்டுவதை எதிர்பார்க்கிறாயா? அவனிடமும் இவ் விருப்பு உண்டு. அவன் விருப்பு வெறுப்புக்களைத் தெரிந்து கொள். அவனுக்கு மகிழ்ச்சி தருபவற்றில் உன் ஆர்வத்தை வெளிப்படுத்து.

◆ நண்பனோடு மனம் விட்டு உரையாடு. உன் உணர்வுகளையும் நீ வெளிப்படுத்தும் போது உன் உரையாடல் ஆழம் பெறும். உன் கசப்பு அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும்போது நம்பிக்கை அதிகமாகும்.

◆ உன் நண்பனிடம் கருத்து வேற்றுமை இருப்பது தவறல்ல. வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்க அவனுக்கு உரிமையுண்டு. அவனது தனித் தன்மைகளை ஏற்றுக்கொள்.

◆ நீ விரும்புவதை உன் நண்பன் நிறைவேற்றினால் மகிழ்ச்சி கொள். அதை அவன் நிறைவேற்ற விரும்பாவிடில் வற்புறுத்தாதே. அவன் உனக்கு அடிமை அல்ல.

◆ உன் நண்பனின் செயல்கள் உனக்கு ஏமாற்றத்தை தருவிக்கலாம். ஏமாற்றங்கள், தோல்விகள் நட்பிலும் இடம் உண்டு. அவை உன் எதிர்[illegible]ளை மாற்ற உதவட்டும்.

[illegible]நகரங்களில் ஆண்கள், பெண்கள் உரையா[illegible] பழகுவது இயல்பானதாகக் கருதப்படுகின்[illegible]பாலாரோடு நட்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்[illegible]ாக்கியமான ஆண், பெண் நட்பு காணப்படு[illegible]றது.

**[illegible]பாலாரோடு வளர்கின்ற நல்ல நட்பு......**

✖ நட்பின் பண்புகளைக் கொண்டுள்ளது.

✖ [illegible]ன வரையறைகளைத் தாண்டுவதில்லை.

✖ [illegible]பாலாரை சமமாக மதிக்கின்றது.

உங்கள் நட்பை "நல்ல நட்பாக" மாற்றுங்கள்.

த. ஜூலியற்
இல:13, ஒலிவ் லேன்,
மட்டக்களப்பு.

# ஆபத்தான விசர்நாய்க்கடி நோய் அவதானம் வேண்டும்!

எமது பிரதேசத்தில் விசர் நாய்க்கடி பெரும் பிரச்சினைக்குரிய விடயமாகிவிட்டது. இந்நோய் எங்ஙனம் பரவுகிறது? இந்நோய் விசர் நாய்க்கடியால் பரவுகிறது. இந் நோய்க்குக் காரணமான வைரஸ் கிருமிகள் விசர்நாயின் எச்சிலில் ஏராளமாக இருப்பதால் நோயுற்ற நாய் மனிதரைக் கடிக்கும்போது அவர்களுக்கு இந் நோய் உண்டாகின்றது, உரைசல் காயங்களுள்ள தோலின்மேல் விசர்நாய் நக்கும் போதும் நோய் தொற்றுகிறது, நாயில் நோயின் அறிகுறிகள் தோன்றுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்பே அதன் எச்சில் நோயைப் பரப்பும் தன்மையைப் பெற்றிருக்கும். நோயுற்ற நாயுடன் தொடர்பு கொள்பவர்களைக் கணக்கிடுவதற்கு இந்த உண்மையை மனதில் வைத்திருப்பது அவசியமாகும்.



**நாயில் விசர் நோயின் அறிகுறிகள்:-**

நாயின் நடமாட்டத்தின் மாற்றமும் மாறுபட்ட உணவில் விருப்பமுமே ஆரம்ப அறிகுறிகளாகும். (உதாரணமாக ஒரு நாய் மூலைகளில் ஒதுங்கிப் பதுங்கலாம். எஜமானுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கலாம். அல்லது அதிகமான அன்பைக் காண்பிக்கலாம்) பின்பு வெருட்சியான ஒரு நிலை தோன்றுகின்றது. அந்த நிலையில் திடீரென்று தாக்குதலோ தூண்டுதலோ இல்லாமல் கடித்தலும் காரணமில்லாமல் அலைதலும் விசேஷமாகக் காணக்கூடிய தன்மைகளாகும். இப்போது நாயின் குரைப்பு மாறி, இளைப்புத் தன்மையும், விழுங்கப்படாத எச்சில் வாயால் வடிதலையும் காணலாம். நடையில் தள்ளாட்டம் ஏற்படும். ஓரிரு நாட்களில் பாரிசவாதம் தோன்றும். அப்பொழுது உயிரற்ற நிலையில் வால் தொங்கும், முதலில் பின்னங் கால்களையும் பின்பு முன்னங்கால்களையும் பாதிக்கும். கடைசியில் செயலற்று நாய் படுத்திருக்கும். அறிகுறிகள் தோன்றிப் பத்து நாட்களுக்குள் மரணம் சம்பவிக்கும். விசர் பிடித்த நாயொன்றை தனிமைப்படுத்தி 14 நாட்களுக்குப் பின்பும் அது உயிர் வாழ்ந்தால் அதற்கு விசர் நோய் இல்லையென்று நிச்சயமாகக் கூறலாம். மனிதனில் விசர் நாய்க்கடி நோயின் அறிகுறிகள் எவ்வாறிருக்கும்?

(அடுத்தவாரம் தொடரும்)

எஸ்.வாசுகி..

# காதல் கொள்ளாத இதயங்களும் இருக்கின்றதா?

காதல் ஒரு அற்புதம். காதலைப் பற்றிப் பேசாத காலம் எதுவும் சரித்திரத்திலில்லை.

காதலை மரியாதை செய்யவே வருடந்தோறும் 'பெப்ரவரி 14' இல் 'காதலர் தினம்' இறக்கை கட்டி வருகின்றது. காதல் உள்ளங்களைக் களிப்புறச் செய்கிறது.

காதல் என்ற வார்த்தையைத்தான் விஞ்ஞானம் 'ஈர்ப்பு' என்று மறுவார்த்தை கொண்டு அழைக்கிறது.

காதலை அறியாதவன் வாழ்வின் முதற் பாடத்தையே கல்லாதவன்.



காதல் சுதந்திரமானது. அது எப்போதும் சுதந்திரக் காற்றையேதான் சுவாசிக்கிறது. காதலினால் பாலைவனம் நீரூற்றாகிறது. இதயங்கள் பசுமை பெறுகின்றது.

காதல் சிறிதும் இடம் பெறாத வாழ்வு சுடலைக் காடு போலாகிறது.

காதல் ஒரு செடி. கடிதம், கவிதை, முத்தம், ஊடல், கைக்குட்டை என அதில் மலரும் மலர்கள் ஏராளம்.

காதல் என்ற மூன்றெழுத்திற்குள் மூழ்கிக் கிடக்கும் தத்துவம் தெரியுமா உங்களுக்கு?

கா- காத்திருத்தல்
த - தனித்திருத்தல்
ல் - இல்லாமல் போவது.

காதலில் ஒருவரை ஒருவர் காத்திருக்கச் செலவு செய்யும் ஒவ்வொரு விநாடியும் வாழ்வை வளமாய்ச் செதுக்கும் இன்பமான நிமிஷங்கள்!

காதலர்களே, இக் காதலர் தினத்தை இறைவன் உங்களுக்களித்த அன்பளிப்பாய் ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் காதல் உண்மையானதாய் அமைந்து வெற்றி பெற வேண்டும் என இறைவனைத் இத்தருணத்தில் பிரார்த்தியுங்கள்.

விழிகளில் தொடங்கும் காதல், கல்யாணத்தில் சங்கமிக்கிறது.

காதல் விசித்திரமான அனு[illegible]

எஸ். ஏ. ஸர்மிளா

# காதல் வென்றால் ஜீவிதம் தோற்றால் காவியம்

பெப்ரவரி 14 உலக 'காதலர் தினம்' எல்லா மங்கள நிகழ்வுகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் ஒரு நந்நாள் குறிக்கப்பட்டது போல காதலர் தினமும் பெப்ரவரி 14 ஆந் திகதி 'வலன்டைன்ஸ் டே' என்று கொண்டாடப்படுகிறது.

உலகிலுள்ள அனைத்துக் காதலர்களும் வெவ்வேறு இன மதங்களைச் சேர்ந்தவர்கள் எனினும் உலக காதலர்கள் அனைவரும் ஒன்று சேர மனங்களை மாத்திரமல்ல மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளும் திருநாளே இந்தக் காதலர் தினம். பெப்ரவரி 14 ஆந் திகதியே அவர்களுக்குரிய கொண்டாட்ட நாள்.

காதலர் தினம் வெளிநாடுகளிலிருந்து எம் நாட்டிற்கு வந்த இறக்குமதிக் கலாசாரம் தான். ஆனால் காதல் மட்டும் மனித குலம் என்று தோன்றியதோ அன்றே தோன்றிவிட்டது.



கூர்ப்புக் கொள்கையில் அதிக முன்னேற்றமடைந்த மானுட சமுதாயத்தின் அதீத உயரிய சிந்தனைகளில் காதலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

காதல் என்பது மனி தனின் உயிரில், உணர்வில் ஒன்றி யுள்ள ஆத்மார்த்தமான உறவு. "காதல்' என்று வெறுமனே உதட்டளவில் கூட உச்சரிக்காதவர்களே இல்லை. காதலில் வெற்றி என்று எதைச் சொல்வது? காதல் திருமணத்தில் முடிவதை காதலில் வெற்றி எனலாமா? என்றும் நீங்கள் யோசிப்பீர்கள்? ஆனால் காதலர்கள் இணைந்து விடுவதாலே இந்தக் காதல் வெற்றிபெற்று விட்டது என்றும், காதலர்கள் பிரிந்து விட்டால் அந்தக் காதல் தோற்றுவிட்டது என்றும் கூற முடியாது. ஏனெனில், காதலில் மாண்டு போனவர்களைத்தான் காவியம் இன்றும் பாடுகிறது.

ஆகவே காதலை மட்டும் காதலியுங்கள். காதல் உங்களைக் காதலிக்கும். காலம் எமக்குத் தந்த காதலைப் பற்றிய சில சிந்தனைத் துளிகள்.

✿ உண்மையான காதல் சுய நலத்தை அழிக்கும், தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும் ஊக்குவிக்கும். உலகையே நேசிக்கச் செய்யும்.

✿ அழகிகள் எல்லோரும் காதலிக்கப்படவில்லை. காதலிக்கப்படும் ஒவ்வொருத்தியும் அழகிதான்.

✿ நீ காதலிக்கப்பட வேண்டுமானால் நீ காதலிப்பவனாக இருக்க வேண்டும். காதலுக்கு உகந்தவனாகவும் இருக்க வேண்டும்.

✿ மௌனம் ஒரு தேசிய பாஷை. அதிலே காதலர்கள் பேசுகின்றார்கள்.

✿ காதலின் இன்ப வேதனையை அறியாதவர்கள் யாருமில்லை.

✿ தடைகள்தான் காதலுக்கு அதிகமான கௌரவத்தை தருகிறது.

✿ கடவுளின் தலை சிறந்த அன்பளிப்பே காதல்.

எஸ். பகீரதி

பவம் வாழ்வில் பற்றுதலை உண்டு பண்ணுவதும் காதல் தான்.

காதலுக்கு என்றுமே 16 வயது தான். உள்ளத்தை குழந்தை மனதுக்கு கொணர்வதும், கோழையை வீரனாக்குவதும் காதலேதான். இரும்புச் சிறைகளையும் உடைத்தெறியும் வல்லமையைக் காதல் கொடுக்கும். காதல் அது ஒரு சக்தி. சில சமயம் அது போதையும்கூட.

காதலர்களுக்கு, அட்வான்ஸ் காதலர் தின [illegible] வெற்றி பெறுங்கள். [illegible]வாழ்த்துக்கள்!

**காதல் வாழ்க!**
**காதலர் வாழ்க!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரட்சியும் வசந்தமும்

குமாரிக்கு வயது இருபத்தி ஆறு! பார்த்தவரைச் சுண்டியிழுக்கும் அலங்காரத் தேர் போன்ற அழகுக் கோலம் பூண்டவள். அவளின் வசீகரமான புன்னகையும், கவர்ச்சியான கண்களும் அவளுக்கு மேலதிகத் தகைமைகளை வாரி வழங்கி இருந்தன.

ஜோக்குகளை ரசிக்கும்போதும், காரியாலயத்தில் நடந்த வேடிக்கையான சம்பவங்களை வாய்விட்டுச் சொல்லும் போதும் அவள் முகத்தில் நாணத்தின் கோடுகள் தடம் பதிக்கும். அந்த அழகுகளையே நாளெல்லாம் பொழுதெல்லாம் ரசித்துக் கொண்டேயிருக்கலாம்.

அவள் மென்மையான மனோபாவத்தைக் கொண்டிருந்தாலும் ஆத்திரமும், எரிச்சலும் தலை காட்டினால் அவள் வித்தியாசமாகத்தான் நடந்து கொள்வாள். அதுவும் அபூர்வமாகத்தான் இருக்கும். அவள் கொழும்பிலுள்ள உயர கல்லூரியில்தான் கல்வி பயின்றாள். பிரமுகர்களையும், பெரிய கனவான்களையும் தயார் செய்து கொடுத்த பெருமையும், சிறப்பும் அந்தக் கல்லூரிக்கு உண்டு. அவள் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருந்தபோதிலும் அவளின் நட்பும், தொடர்புகளும் சீமான்தனமான குடும்பங்களுடனேயே நெருக்கமும், இறுக்கமும் கொண்டிருந்தன. அதனால் சீமான்தனமான போக்குகளையும், நோக்குகளையுமே நிறையச் சம்பாதித்திருந்தாள் குமாரி!

அவள் கிறிஸ்தவ கோட்பாடுகளின் கீழ் வளர்க்கப்பட்டதனால் தனது நடத்தை, சொல், காரியங்கள் அனைத்திலும் மிகுந்த கவனம் கொண்டவளாகவும் விளங்கினாள். இதுவரையில் அவளுக்கு ஆண் சிநேகிதமே கிடையாது. அதை உருவாக்கிக் கொள்வதற்கான தைரியமும் அவளிடம் கிடையாது. அதுமட்டுமல்லாமல், ஒரு வாலிபன் தன்னைத் தொட்டுவிட்டாலே தனது கற்பு களங்கமாகிவிடும் என்ற நம்பிக்கையும் அவளுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்திருந்தது.

குமாரியின் தோழிகள் அனைவரும் கொழும்பிலுள்ள ஆடம்பர ஹோட்டல்களில் தமது திருமணங்களை முடித்துக்கொண்டு கரையேறிக் கொண்டார்கள். ஆனால் குமாரி? தான் மட்டும் தனித்துவிடப்பட்டதாக உணர்ந்தாள். ஸ்னோவைட் வண்ணத்திலான குதிரையில் பளபளக்கும் ஆயுதம் தரித்த வீரன் வந்து அவளை ஏற்றிக் கொண்டு போகமாட்டானா? அவளின் எண்ணங்கள் ஊர்வலம் வந்தன. கற்பனைகள் நீரூற்றாகச் சுரந்தன.


நடன நிகழ்ச்சியொன்றுக்குக் குமாரி சென்றிருந்தாள். அங்கே ஒரு வாலிபனைச் சந்திக்கும் சந்தர்ப்பம் அவளுக்குக் கிட்டியது.

நத்தானியல்! அழகான வாலிபன் தான். மன்மதனாகவே காட்சி தந்தான். குளுமையான புன்னகை! சீரிய பண்புகள்! குமாரிக்கும் அவன் மேல் பிடிப்பு ஏற்பட்டு விட்டது. நத்தானியல் அன்பளிப்புப் பொருள்கள் கொடுத்தான். அவளைப் பாராட்டிப் பேசினான். பரவசமூட்டினான். காதல் கனிந்தது. கல்யாணம் செய்துகொள்ளவும் முடிவு செய்தனர். திருமணம் செய்துகொள்ள நாளும் குறிக்கப்பட்டது. குமாரி கனவுலகில் மிதந்தாள். வானுலகில் தேவதையாக அவள் வலம் வந்தாள். கற்பனைகள் சிறகடித்துச் சிருங்கார கானங்கள் இசைத்தன. நிச்சயதார்த்தம் நிகழ்ச்சிக்குத் தோழிகள் அனைவரும் அழைக்கப்பட்டார்கள். திருமணம் நடைபெற இன்னும் சில வாரங்களே இருந்தன. அதற்குள் ஒரு நிகழ்வு! என்ன அது?

நத்தானியல் பொருள்வளம் - வசதி, உள்ளவன் அல்ல! இரண்டாம் தரமான குடும்பத்தைச் சேர்ந்தவன். பெரிய ஆடம்பர ஹோட்டலில் கல்யாணம், விருந்து, கேளிக்கை, கும்மாளம் இவற்றுக்கெல்லாம் அவனால் முகம்கொடுக்க முடியுமா? குமாரியின் எதிர்பார்ப்புகளுக்கும், கனவுகளுக்கும் அவனால் ஈடுகொடுக்க முடியவில்லை. இருவருக்குமிடையே முரண்பாடுகள் வேரூன்றின. விரிசல் வலுப்பெற்றது. ஆயினும் இறுதியில் கல்யாணமும் முடிந்தது. தேன் நிலவும் ஆபத்தில்தான் முடிந்தது.

அன்று அவர்களுக்கு முதலிரவு! "உங்களுக்கு இதற்கு முன்னர் வேறு பெண்களுடன் உறவு இருந்ததா?" அக்கறையுடன் குமாரி வினவினாள் நத்தானியலிடம்! கட்டிலில் சாய்ந்திருந்த அவன், தலையணையை மேலும் சௌகரியமாக வைத்துக்கொண்டு சொன்னான். அவனின் வார்த்தைகளில் சிறு பிள்ளைத்தனமும், கபடமின்மையும் பளிச்சிட்டன.

"நான் கொஞ்சக் காலத்துக்கு முன் ஒரு நண்பனோட ஒரு வீட்டுக்குப் போனேன். அங்கே ஒரு பொண்ணு இருந்தா! அந்தப் பெண்ணோடு நான் உறவு வெச்சுக்கிட்டேன். ஆனா அதைப்பத்தி நான் ரொமப மனம் வருந்தினன். அந்த சம்பவத்துக்குப் பிறகு நான் வேற எந்தப் பெண்ணோடையும் உறவு வெச்சுக்கல" சங்கடத்தோடும் அதேவேளை மென்மையாகவும் இதைச் சொல்லி முடிப்பதற்குள் குமுறும் எரிமலையாக மாறிவிட்டாள் குமாரி! அவளால் இதனைச் சகித்துக்கொள்ள முடியவில்லை! படமெடுத்த பாம்பாகச் சீறினாள். கூச்சலிட்டாள்! "நீங்க ஒரு மோசமான ஆள்! அயோக்கியன்! எவ்வளவு கேவலமாக நடந்திருக்கிறயள்! என்னை ஏமாத்திப் போட்டிங்க!" அழுதாள்! கத்தினாள்! தகாத வார்த்தைகளால் வசை பாடினாள்.



ஆனால் அவனோ "இந்த அழகான பெண்ணைத்தான் நான் விரும்பினேனா! இந்த அழகுக்குப் பின்னால் எவ்வளவு குரூரம்! வக்கிரம்! இவள்தான் என் மனைவியா? முதலிரவு இப்படித்தான் நடக்கணுமா? என்ன சோதனை இது!" நம்பிக்கை இழந்து மனம் வாடினான்.

"குமாரி டார்லிங்!" அவளைச் சாந்தப்படுத்த அவன் மேற்கொண்ட பிரயத்தனங்களும் தோல்வி கண்டன! அவனைப் பேசவே அவள் விடவில்லை. தனது உடைகள், உடமைகள் அனைத்தையும் அள்ளியெடுத்துப் பெட்டியில் திணித்துக் கொண்டாள். காலில் செருப்பை மாட்டிக்கொண்டாள். "என்னை வீட்டை கொண்டு விடுங்க!" பெண் சிங்கமாகக் கர்ஜனை செய்து உத்தரவு போட்டாள் நத்தானியலைப் பார்த்து! அவளின் ஆவேசம் உச்ச நிலையில் இருந்தது. அவளைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. அவனை மன்னித்து விடும் நிலையில் குமாரி இல்லை! அவனை விட்டு அவள் ஒதுங்கி வாழ்ந்தாள். அவனுடன் உறவு கொள்ளவே அவளுக்கு அருவருப்பாக இருந்தது.

அவர்களுக்கிடையே அன்பும் காதலும் மலரவில்லை. தொடர்ச்சியான வாக்குவாதங்களே நிகழ்ந்தன. ஒருநாள் குமாரி அடுத்த் வீட்டாருக்கும் கேட்கும் அளவுக்கு இரைந்து கத்தினாள். "படுமோசமான ஆள்! பொய்யன்! பணம், சொத்து, வசதி எல்லாம் இருக்கு எண்டு பொய் சொன்ன ஆள்! எண்ட தோழிகளின்ட புருஷன்மார் அழகான கார், அழகான வீடு எல்லாம் வச்சிருக்கிறாங்க! எவ்வளவு சந்தோஷமா அவங்க சீவிக்கிறாங்க! போயும் போயும் இந்தப் பிச்சைக்காரனுக்கு கழுத்தை நீட்டினேனே!

"மோட்டார் சைக்கிள்ல பின் சீட்டுல சவாரி செய்ய வரட்டாம்! சேரிப்பகுதில வீடு எடுத்திருக்கு வாடகைக்கு! குடும்பம் நடத்த! தான் பிச்சைக்காரன் எண்டு கல்யாணம் ஆக முந்தியே வெளிப்படையாக சொல்லியிருக்கலாமே! இப்படியெண்டு தெரிஞ்சிருந்தா ஒரு தடியால கூட தொட்டிருக்கமாட்டன். எண்ட தலையெழுத்து!" வெதும்பினாள் குமாரி! அவள் விவாகரத்துக்கும் ஆயத்தமானாள். நத்தானியல் அவளை ஆறுதல்படுத்த முயன்று சொன்னான் "குமாரி! அவசரப்படாதே! ஆத்திரப்படாதே! பொறுமைகாட்டு! இன்னும் கொஞ்சநாளில எங்கட கம்பெனியில எனக்கு புரமோஷன் கிடைக்கும். பெரிய சம்பளமும் கிடைக்கும் காரும் கிடைக்கும். குவாட்டசும் தருவாங்க!"

"இந்தப் பொய் புரட்டுக்கெல்லாம் நான் அடிமையாக மாட்டன். உங்கட சாயம் வெளுத்துப் போச்சு!" என்று ஆவேசமாகச் சொல்லிக் கொண்டே மேசையில் இருந்த பூஜாடியை அவன்மீது வீசி எறிந்தாள். எந்த வகையிலும் குமாரியை இணக்கத்துக்குக் கொண்டுவர முடியவில்லை அவனால்!

இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட குமாரியின் தோழிகள் இந்தப் பேராபத்தில் இருந்து அவர்களைக் காப்பாற்ற தகுந்த ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் வழங்கினார்கள். ஆயினும் அதையெல்லாம் அவள் உதாசீனம் செய்துவிட்டாள். எனக்கு ஆலோசனையும் தேவையில்லை. அபிப்பிராயமும் தேவையில்லை. அந்த முட்டாளுக்குத்தான் ஆலோசனையும் மருந்தும் தேவை" என்று வெடுக்கென்று சொன்னாள். அவர்கள் இருவரையும் இணைத்து வைக்க தோழிகள் மேற்கொண்ட பிரயத்தனங்களும் தோல்வி கண்டன. விவாகரத்துக் கோரும் வரையில் விடுதியில் வாசம் செய்தாள் குமாரி.

நத்தானியல் இன்னமும் கம்பெனியில் வேலை செய்கிறானா என்று கண்டறிவதற்காக குமாரி ஒருநாள் அவனுக்கு டெலிபோன் பேசினாள். அந்த டெலிபோன் அழைப்பு என்னதான் என்று அவன் தெரிந்து கொள்ளும் முன்பாகவே படாரென்று போனை வைத்து விட்டாள் குமாரி! இன்னும் அவளுக்கு ஆவேசம் தணியவில்லை என்பதையே அது புலப்படுத்தியது. இன்னமும் அவள் தன் கணவனான நத்தானியல் மீது சீற்றம் கொண்டவளாகவே இருந்து கொண்டிருந்தாள். அவனை அவள் இரண்டாம்தர மனிதனாக அலட்சியமாகவே கருதிக்கொண்டாள்.

ஒருநாள் குமாரியிடம் அவளின் தோழி "குமாரி! ஒண்ட ஹஸ்பெண்டு மோட்டார் பைக் அக்சிடென்ற் ஆகி ஜெனறல் ஹொஸ்பிட்டல்ல இருக்கார்" என்ற சொன்னாள். அதைக் கேட்ட குமாரி "அப்படியா சங்கதி! சனியன் ஹொஸ்பிட்டல் கட்டில்லயே கிடக்கட்டும்" என்று சொல்லிவிட்டு அந்த நிகழ்ச்சியையும் மறந்தே போனாள்.

ஒருநாள் அவள் கேள்விப்பட்டாள்! நத்தானியல் இன்னமும் ஹொஸ்பிட்டலில் இருப்பதாகவும், வருத்தமும் கடுமையாகி மூளை பாதிக்கப்பட்டிருப்பதாகவும்! கோபத்தை ஆவேசத்தை எல்லாம் மூட்டை கட்டி விட்டு அந்த மனிசனைப் போய்ப் பாரு! பாவம் சாகக் கிடக்கிறாரு!" குமாரியிடம் தோழிகள் வற்புறுத்திச் சொன்னார்கள்.

அரைகுறையான விருப்பத்தோடு குமாரி ஹொஸ்பிட்டலுக்குச் சென்றாள். அழுக்கான விரிப்பு! அழுக்கான தலையணை! கட்டிலில் நத்தானியல் படுத்துக் கிடந்தான். அங்கே அழகான பெண்ணொருத்தி அவனுக்கு நெற்றியில் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். இந்தக் காட்சியைக் கண்டதும் குமாரிக்கு ஆத்திரமும், சீற்றமும் பொங்கியது. "இப்படியெல்லாம் பணிவிடை செய்யிறதுக்கு நீங்க யாரு?" கேள்வியும் கேட்டு வைத்தாள் குமாரி. அவளின் மனதுக்குள் பயங்கரமான போராட்டமே நடந்துகொண்டிருந்தது.

**ஆங்கில மூலம் : டி.எல்.சிறிமன்ன,**
**தமிழ் மூலம்: புன்னகை வேந்தன் - மருதமுனை.**

இந்தக் கேள்வியைக் கேட்டு மனம் கலங்காத அந்தப் பெண், "நான் அவருக்கு எந்த உறவும் இல்லை! எண்ட மாப்பிள்ளை அடுத்த கட்டில்ல படுத்துக்கிடக்கிறாரு. ரெண்டு பேருமே சினேகிதர்கள்!" புன்முறுவலோடு சொன்னாள்! "இந்தக் கட்டில்ல ரெண்டு கிழமைக்கு மேலே இவர் படுத்துக் கிடக்கிறாரு. எவருமே இவரை வந்து பார்க்கல்ல! அனாதை போல கிடக்கிறாரு. இவர் எண்ட மாப்பிளர சினேகிதர். மனிசர்களுக்கு இருக்க வேண்டிய அன்பு, இரக்கத்தினால இவருக்கும் நான் பணிவிடை செய்யிறன்! இவருக்கு தாய், தகப்பன், பொண்டாட்டி, இனசனங்கள் இல்ல போல இருக்கு!" மேலும் விபரித்துச் சொன்னாள் அந்தப் பெண்.

"அது சரி! நீங்க யாரு?"

"நான் அவருட பொண்ஜாதி!"

"அப்படியெண்டா இவ்வளவு நாளைக்கும் என்னதான் செஞ்சிங்க! உங்களுக்கு இரக்கமே இல்லையா? மனம் என்ன கல்லா? பாறையா? சாகக் கிடக்கிறாரு மனுஷன். ஐயோ பாவம்!" அந்தப் பெண் கொஞ்சம் சினம் ஏறியவளாகச் சொன்னாள்.

குமாரி வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள். குற்றமுள்ள நெஞ்சம் பதறித் துடித்தது. கண்களில் நீர் சுரந்து வழிந்தது. கருணையுடன் கணவனின் வதனத்தை நோக்கினாள். குனிந்து அவன் கன்னங்களை முத்தமிட்டாள். "டார்லிங்!" என்று அவன் காதுக்குள் சொன்னாள். அவனது உடம்பு நெருப்பாகச் சுட்டது. நினைவிழந்த நிலையில் நத்தானியல் படுத்திருந்தான்.

அடுத்த நிமிடமே அவள் வீடு நோக்கி விரைந்தாள். அவனுக்காக புதிய விரிப்பும், உடைகளும் உணவும் கொண்டுவர! வரும் வழியில் அந்தோனியார் தேவாலயத்தில் தரித்து முழங்காலில் நின்று வணக்கம் புரிந்தாள்! சிலுவைக்குத் தோத்திரம் செய்தாள். "தந்தையே! என்னை மன்னித்து விடுங்கள்! நான் பாவம் செய்தவள்! என் பாவத்தை ஒப்புக் கொள்ளுங்கள்!" குமாரியின் கண்களில் கங்கை பிரவாகம் எடுத்தது. அவளின் உள்ளம் எனும் மாளிகையில் நத்தானியல் குடியேறியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் சில நிமிடங்கள்...

'நலத்தின் கண் நாரின்மை தோன்றினவனைக் குலத்தின் கண் ஐயப்படும்' என்பது வள்ளுவப் பெருந்தகை வாக்கு. அதாவது குலநல முடையவனாகிய ஒருவனிடம் இரக்கமின்மை காணப்படுமாயின் அவன் பிறந்த குலத்தன் மீது உலகம் சந்தேகம் கொள்ளும்.

நற்குணங்கள் பலவிருந்தும் அன்பு இருக்காத வரை அவை பூரணத்துவம் பெறாது. அன்பு சக்தி வாய்ந்தது. வல்லமை நிறைந்தது. அன்பு என்ற அஸ்த்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்ட உறவுகள் உடைந்து போவதில்லை.

# அன்பினால் வெல்வோம்

அன்பிற்காக எதையும் இழக்கலாம். ஆனால் எதற்காகவும் அன்பை இழந்துவிடக்கூடாது. சமயங்கள் அன்பைப் போதிக்கின்றன.

உண்மையில், யாருமில்லாதவர்கள் அநாதைகளில்லை. அன்பு செலுத்த யாருமில்லாதவர்கள் தான் அநாதைகள். உங்களால் யாரும் நிராகரிக்கப்படாதிருப்பதில் கவனமாய் இருங்கள். அநாதைகளின் எண்ணிக்கை அதிகரிக்காதிருப்பதில் எச்சரிக்கையாயிருங்கள். உள்ளங்களைத் திறந்து வையுங்கள். அன்பினால் பிறர் மனங்களை இதப்படுத்துங்கள். அதனால் பக்குவம் பெறுவது உங்கள் இதயங்கள்தான்.

உங்களை யார் யார் நேசிக்கிறார்கள் என்பது இருக்கட்டும். நீங்கள் யார் யாரை நேசிக்கிறீர்கள்? யார் யாரில் அன்பு வைத்திருக்கிறீர்கள்? கணக்கிட்டுப் பாருங்கள.

மென்மையாகப் பேசுங்கள். அன்போடு பேசுங்கள். அதில் வெற்றி உண்டு. காந்தி அடிகளை நீங்கள் அறிந்ததில்லையா? அகிம்சாவாதியாய் இருந்து வெள்ளையரை விரட்டிய கதைகளைக் கேட்டதில்லையா?

அன்பு புனிதமானது. பூரணத்துவமானது. எனவே பெரியார்கள் சொன்னதையும் பாருங்கள்.

✦ ''சிறியோரிடத்து அன்பு காட்டாதவனும் பெரியோரை மரியாதை செய்யாதவனும் என்னைச் சார்ந்தவனில்லை" -முஹம்மது நபி-

✦ மக்களிடையே இரக்கமும், சகோதர பாசமுமே மனித வாழ்வில் பெறுவதற்காக முயல வேண்டிய பேருணர்ச்சிகளாகும். -மார்லி-

✦ அன்பு என்பது ஆண், பெண் இருபாலாரிடமும் விளங்கும் ஈடு இணையற்ற பண்பாகும். -பெர்ள் பக்-

✦ கட்டுப்பாடற்ற மனத்தினால் தூய காதல் காததூரமாக்கப்படுகிறது. -நோர்டா-

✦ உலகில் கடமையும், அன்பும் ஒன்று சேரும் போது தான் அவ்வன்பு வேரூன்றி நிற்கும். -கவிதாகூர்-

✦ அன்பினால் பட்ட மரம் தழைக்கிறது பாலைவனம் பசுமை ஊற்றாக் ஆகிறது. -துவிஜேந்திரலால்-

✦ அன்பு தானாக வருவது. அதனை விலைக்கு வாங்க முடியாது. -லாங்ஃபெல்லோ-

✦ பகையை அன்பினால்தான் வெல்ல முடியும். இதுவே பண்புடைய விதி -புத்தர்-

✦ உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை. -விவேகானந்தர்-

✦ உலகத்திலே மக்கள் பால் அன்பு கொள்பவனே உண்மையாக வாழ்பவன் ஆவான். -அந்தோனி-

✦ அன்பு கொள்ளாதவன் கடவுளை அறியாதவன். ஏனெனில் அன்பே கடவுள். -இயேசு பெருமான்-

✦ கடலில் விரிக்கும் வலையில் மீன்கள் தான் வந்து சிக்கும். கடலின் அடித்தளத்தில் இருக்கும் முத்துக்கள் சிக்காது. இது போல அன்பிற்கு கட்டுப்பட்டவன் அதி



காரத்திற்கு கட்டுப்படுவதில்லை.

✦ உயர்ந்த உள்ளங்கள் அதிகாரத்திற்கு பணிவதில்லை.


✦ அன்பு நிறைந்த இதயமே உலகில் மிகப்பெரிய எண்ணங்களின் இருப்பிடம்.

அதிகாரத்தினால் கிடைக்கும் பெருமையை விடவும் உண்மை அன்பினால் கிடைக்கின்ற பெருமையும் ஒருவரில் ஏற்படுகின்ற பண்பும் தனித்துவமானது என்பதை வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். அன்பு நிலையானதென்பதையும் உணர்த்திருப்பீர்கள். சரி அடுத்த வாரமும் வழமைபோல் இன்னுமொரு விடயத்துடன் உங்கள் இல்லம் வருகிறேன். அதற்கு முன்னதாக 'உங்களுடன் சில நிமிடங்கள்' பற்றி உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி.

**உங்களுடன் சில நிமிடங்கள்.**
**தினக்கதிர்.**
**155, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

**மீண்டும் சந்திப்போம்.**
**எஸ்.ஏ.ஸர்மிளா**

# தினக்கதிர் குறுக்கெழுத்துப் போட்டி இல: 07




**இடமிருந்து வலம்**

1. உலகின் இருண்ட கண்டம் எனப்படுவது.
6. சித்தார்த்தர் (புத்தர்) உதறித் தள்ளியது.
8. சிலருக்கு வாந்தி இதனாலும் ஏற்படுவதுண்டு. (குழம்பியுள்ளது)
9. பெண்களின் அணிகலன்களில் ஒன்று. ஆனால் இதனை முற்காலத்தில் ஆண்கள் அணிந்தார்கள்.
10. சுறுசுறுப்பின் எதிர்ச்சொல் (குழம்பியுள்ளது)
11. தேவலோகக் கன்னியர்களில் ஒருத்தி இறுதி எழுத்து இல்லாமல் மயக்குகிறாள்.
12. தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு காலப்பகுதி.
14. சுவாமி விபுலானந்தர் பிறந்த இடம் குழம்பி நிற்கிறது.
15. நெருப்பு.
16. அவுஸ்திரேலியாவின் தேசிய சின்னம். இறுதி எழுத்தை விழுங்கிவிட்டது.
19. ஆதிகால மனிர்களின் இருப்பிடம்.
20. இந்தியாவின் முதல் பிரதமர்.
21. மாலைதீவின் தலை நகரம். (திரும்பியிருக்கிறது)
24. ஈ ஏறி இது குலுங்குமா? என்றொரு பழமொழி உண்டு.

**மேலிருந்து கீழ்**

1. இது அறிவுக்கு சத்துரு என்பார்கள்.
2. கண்ணாடியில் தோன்றுவது.
3. வேதகாலத் தெய்வம் வருணனை இக் கோட்பாட்டுக்கு தெய்வம் என்பர். அர்ஜுன் நடித்த திரைப்படம் ஒன்றும் இப்பெயரில் உள்ளது.
4. பிரபலமான ஓவியர் ஒருவர். (குழம்பிப் போய் நிற்கிறார்).
6. 1786 இல் சுதந்திரம் பெற்ற நாடு.
7. பெண்களின் ஆடை வகைகளில் ஒன்று.
12. கூர் வாய் கொண்ட ஓர் பறவை.
13. பெறுமதி வாய்ந்த ஒரு பொருள்.
16. மயிர் நீப்பின் உயிர் வாழா இது இறுதி இரண்டு எழுத்தை இழந்து நிற்கிறது.
17. போக்குவரத்துச் சாதனங்களில் ஒன்று.
18. ஓர் மலர். இது சில நாடுகளின் தேசிய சின்னமாகவும் இருக்கின்றது.
19. ஆசிரியர்.
20. தண்ணீர்.
22. பெண்.
23. உலகின் மூங்கில் திரை நாடு எனப்படுவது.

**இதைப் பூர்த்திசெய்து கீழுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். அதிஷ்டசாலிக்கு ஒருமாத காலத்துக்கு 'தினக்கதிர்' வாரவெளியீடு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.**

**குறுக்கெழுத்துப்போட்டி -07**
**தினக்கதிர் வாரவெளியீடு,**
**த.பெ.எண்:- 06,**
**இல:- 155, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

கடந்தவார குறுக்கெழுத்துப் போட்டி-06ற்கான சரியான விடைகள் வருமாறு:

| **இடமிருந்து வலம்** | **மேலிருந்து கீழ்** |
|---|---|
| 1. விளம்பரம் | 1. விசம் |
| 2. சங்கிலி | 3. வெள்ளிவிழா |
| 3. வெள்ளிக்கிழமை | 6. சான் வோன் |
| 4. விளாம்பழம் | 7. ஏவல் |
| 5. ஓசாமா பின்லேடன் | 8. அழகி |
| 8. அநாதை | 9. கிட்டிப்புள் |
| 11. அணில் | 10. டொலர். |
| 12. எழுது வினைஞர் | |

குறுக்கெழுத்துப்போட்டி - 06ற்கு சரியான விடைகளை ஏராளமானோர் நிரப்பி அனுப்பியுள்ளனர். அதில் பரிசுக்காகத் தெரிவானவர்:

**அ.அழகுதுரை,**
**செட்டியார் தெரு,**
**குருக்கள் மடம்,**
**மட்டக்களப்பு.**

## பாராட்டுக்குரியவர்

**1. இ.மிதுஷன்,**
**12, எல்லை வீதி வடக்கு,**
**செங்கலடி.**

**2. த.இராசானந்தம்.**
**கரடியனாறு ம.வித்தியாலயம்,**
**கரடியனாறு.**

# நலமாய் வாழ.....

# பிணி பல தீர்க்கும் மூலிகை மகத்துவம்

## சித்த மருத்துவத்தில் முக்கியத்துவம் மிக்க 'புங்கு'



மர இனத்தைச் சேர்ந்த புங்க மரமானது. எமது நாட்டில் கடலை அண்டிய பிரதேசங்களில் வளர்கின்றது. சித்தமருத்துவத் துறையில் முக்கியத்துவம் பெற்ற மூலிகைகளில் புங்கையும் ஒன்று. புங்கின் வேர், வித்து, பட்டை, பால், இலை என்பன யாவும் வைத்தியத்தில் சேர்க்கப்படும். புங்கை இலையை இடித்து உடைவு ஏற்பட்ட இடத்தில் வைத்துக் கட்டலாம். இது உருக்கு மருந்தாகப் பயன்படுகின்றது. இதன் இலையை மை போல் அரைத்து, கிருமிப் புண்களுக்கு போட்டுவர கிருமி கண்ட புண்கள் ஆறிப்போகும்.

புங்கம் பருப்பை நன்றாக மாவாக்கி குழந்தைகளுக்கு ஒரு குண்டுமணி வீதமும் பெரியவர்களுக்கு ஆறு குண்டுமணி வீதமும் தேனில் குழைத்து இரு வேளை கொடுத்துவர கக்குவான். இருமல், தீரும். புங்கம் பருப்பை சோற்றுக் கஞ்சி விட்டு மைபோல் அரைத்து தேமல், படை கீல்வாதம் முதலிய நோய்களுக்கு பூசிவர சுகம் கிடைக்கும். புங்கம் பருப்பில் இருந்து எடுக்கும் எண்ணையினால் கரப்பான், கிரந்தி, தோஷம் நீங்கும். இந்த எண்ணெயுடன் சிறிது ரசகற்பூரம் சேர்த்து அரைத்து சொறி சிரங்கு படர் தாமரை போன்ற நோய்களுக்கு பூசிவர மேற்படி நோய்கள் குணமடையும். பேன் தொல்லையினால் கஸ்டப்படும் பெண்கள் இந்த எண்ணையினை தலைக்குப் பூசிவர பேன்கள் மாந் திப் போகும்.

புங்க மரத்தின் வேர்களை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி பஞ்சு போல் இடித்து கசக்கிப் பிழிய புங்கம் பால் வரும். இப் புங்கம் பாலினால் புண், புரை யோடிய புண், கிரந்தி படை முதலிய நோய்கள் தீரும், புரையோடிய புண்களுக்கு புங்கம் பாலை துணியில் நனைத்து திரியாக்கி புண்ணுக்குள் புகுத்தி வைத்தால் புரையோடிய புண்கள் விரைவில் ஆறிவிடும். புங்கம் வேர் பொதுவாக வாதக் குடைச்சல் திபோச மூர்ச்சை, வாயு, இரத்தத்தாதுவினால் பிறக்கின்ற நோய்கள் விரணம், புரையோடிய புண்கள், பாம்பு விஷம் முதலியவற்றை தீர்க்க வல்லது. புங்கை மரத்தின் வேர்ப்பட்டையை இடித்து பிட்டவியலாக அவித்து வலி பிடிப்பு, குடைச்சல் போன்ற நோய்களுள்ள தானங்களில் முடிச்சுக் கட்டி ஒத்தடம் கொடுக்க மேற்சொன்ன நோய்கள் அகலும். புங்கம் இலை, நொச்சியிலை, வேப்பிலை சமன் எடுத்து மைபோல் அரைத்து தினம் காலை மட்டும் மூன்று நாட்கள் கொடுத்து வர வயிற்றில் உள்ள கிருமிகள் புழுக்கள் அழிந்து போகும்.

**ஆயுர்வேத சித்த வைத்தியர்**
**ஸ்ரீராமநாதன் கலைவாணன்**
**99/3, வைத்தியர் வீதி,**
**சீலாமுனை, மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரங்கள்:- கமலஹாசன், அப்பாஸ், சிம்ரன், ஸ்னேஹா மற்றும் பலர்...

கேமரா:- ஆர்தர். ஏ.வில்சன்

இசை:- தேவா

வசனம்:- கிரேஸி மோகன்

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்:- மௌலி

தயாரிப்பு:- பி.எல்.தேனப்பன்

# பம்மல் கே.சம்பந்தம் திரைப்பட விமர்சனம்

தினக்கதிர் சினிமா






## இடைவேளை:-

ஆளவந்தானின் ஆழமான பாதிப்பை(?) மறக்க வைப்பதற்கென்றே இந்த முறை நகைச்சுவை கலாட்டா பண்ண வந்திருக்கிறார் கமல். அவ்வை சண்முகி, தெனாலி, வரிசையில் இந்த பம்மல் கே.சம்பந்தம் படத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கலகலப்பு வசனம் தீட்டுவதில் கெட்டிக்காரராக கருதப்படும் கிரேஸிமோகன் வசனம் எழுதியிருக்கிறார். கமல், கிரேஸிமோகன், மௌலி, இப்படி நகைச்சுவையில் கொடி நாட்டியவர்கள் இருந்தும் இதில் நகைச்சுவைக்கு பஞ்சமோ பஞ்சம். கமலை கோமாளியாக்கி துணுக்கு தோரணம் கட்டும் தொழிலை இந்த சினிமாக்காரர்கள் எப்போது தான் விட்டொழிக்கப் போகிறார்களோ? தன்னை அதி நவீன புத்தி சாலியாகவோ அல்லது அசட்டுத்தனமான கோமாளியாகவோ வரும் பாணியை கமல் இனிமேல் தவிர்த்து விட்டு, இயல்பு மாறாத யதார்த்தமான "தேவர் மகனாக" "நாயகனாக" வலம் வருவது நல்லது.

கமலோடு ஜோடி சேர்ந்து நடிப்பது சிம்ரனுக்கு இதுதான் முதல் முறை. காதல் காட்சிகளில் நெருக்கம் காட்டத்தயங்கி "உதடுகள்" நடுநடுங்கிக்கொண்டிருப்பது நன்றாகத்தெரிகிறது. "நடமாடும் நகைக்கடையாக வரும் கமலை அடியோடு மாற்றுகிறார் சிம்ரன். அவரின் காதலை புரிந்து கொள்ளாமல் தன் "பர்சனாலிட்டியை" பார்த்து கேலமாய் பேசுவது கொஞ் சம் அதிகம்.

அப்பாசும்-ஸ்னேஹாவும் இளம் காதலர்களாக வலம் வருகிறார்கள். படத்தில் இருவருக்கும் அதிக வேலை கிடையாது. இவர்கள் தவிர படத்தில் ஒரு பெரிய நட்சத்திரப்பட்டாளமே குவிந்து கிடக்கிறது.

தேவாவின் இசையில் பாடல்கள் சுகம் தருகிறது.

## கதைச்சுருக்கம்:-

சினிமாவில் பெயர் சொல்லத்தக்க நடிகராக இருக்கும் கமல், ஒரு கட்டை பிரம்மச்சாரி. டாக்டராக வரும் சிம்ரனோ, காதல் விரோதி, காதல் என்றாலே அப்படியொரு கசப்பு இந்த இருவருக்கும். கமலின் தம்பியாக வரும் அப் பாஸும், சிம்ரனின் தங்கையாக வரும் ஸ்னேஹாவும் காதலிக்கிறார்கள். ஆகவே கமலும்-சிம்ரனும் சேர்ந்து அப்பாஸ்-ஸ்னேஹாவின் காதலை பிரித் துவைக்க வெகு சிரத்தையெடுத் துக்கொள்கிறார்கள்.

இப்படி காதலர்களை ஒழித்துக்கட்டும் வேலையில் தீவிரமாக இருக்கும் போது கமலும்- சிம்ரனும் அவர்களை அறியாமல் காதல் வயப்பட்டு விடுகிறார்கள். பிறகு என்னென்ன திருப்பங்கள் நிகழ்கிறது என்பது மீதக்கதை.

# சினிமா: ஒரு கலை

திரைப்படமொன்றைப் பார்த்து விட்டு நீங்கள் வீடு திரும்புகிறீர்கள். திரும்பியதும் உங்கள் மனத்திரையில் அதனை இரை மீட்கிறீர்கள். அப்படத்திலுள்ள காட்சிகள் அனைத்தையும் உங்களால் நினைவுக்குக் கொண்டுவர முடிகிறதா? முடியவில்லையல்லவா? ஆம், ஒரு சில காட்சிகளைத்தான் உங்களால் பதிய வைக்க முடிகிறது.

திரைப்படக் கலைபற்றி ஆராய்ந்த விமர்சகர்கள் இந்த உண்மையை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். உண்மையில், திரைப்படம் என்பது சலனத்தின் போது ஒளி காட்டும் வடிவமாகும். கவிதை, புனைகதை, ஓவியம், கட்டிடக்கலை, சிற்பக்கலை போன்றவற்றை ஆற அமர இருந்து நாம் ரசிக்கலாம். ஆனால், திரைப்படம், நாடகம், நாட்டியம், இசை ஆகிய கலைகளை அவை காட்டப்படும் அல்லது நிகழ்த்தப்படும் குறிக்கப்பட்ட நேரத்திலேயே நாம் ரசித்தாக வேண்டும்.

திரைப்படமொன்றில் ஐந்து அம்சங்களை இனம் பிரித்துப்பார்க்க முடியும், இவற்றை பிறேம், ஷொட், சீன், சீக்குவென்ஸ், பேஸ் என்று விமர்சகர்கள் விபரிப்பார்கள்.

திரைப்படமொன்றில் நாடகப் பண்புகளும் சினிமா அம்சங்களும் இணையும் பொழுது. ஒரு புதிய கலை பிறக்கிறது. 'நாடகப்பண்புகள்' என்னும் போது சம்பவங்கள், நடிப்பு, உரையாடல். ஒப்பனை,உடை, பின்னணி ஆகியவற்றைக் கருதுகிறோம். 'சினிமா அம்சங்கள்' என்னும் பொழுது. திரைப்படச் சலனத்தைக் குறிக்கின்றோம். வடிவமும் ஒளியும் கதைச்சலனத்திற்கு உதவுகின்றன. கருத்துக்களும், உணர்வுகளும் சம்பந்தப்படும் பொழுது ஒரு வித அனுபவமும் பெறப்படுகிறது. காலம், ஒளி, கதைப்பொருள் ஆகியவற்றை ஒரு நிலைப்படுத்திக் கொடுக்கும் பொழுது திரைப்படம் உருப்பெறுகிறது.

கதை மாந்தரின் வெளி உலக நடப்புகளைத் தீட்டுவதன் மூலம் அம்மாந்தரின் ஓட்டங்களும் சித்தரிக்கப்படுகின்றன. இதற்குப் பெரிதும் உதவுகிறது 'எடிற்றிங்' எனப்படும் படவெட்டு ஒட்டு வேலையாகும். இதனை படத்தொகுப்பு என்று கூறுவார்கள்.

திரைப்படமொன்றைத் தயாரிக்கும் பொழுது பெரும்பாலான நெறியாளர்கள் அடிப்படையாக சூட்டிங்ஸ்கிறிப்ற் எனப்படும் எழுத்துப் பிரதியைப் பயன்படுத்துவார்கள். திரைப்படக் கலையின் மர்மங்கள் பல இந்தச் சூட்டிங் ஸ்கிறிப்றில் தான் அடங்கியிருக்கின்றன. ஆயினும், சூட்டிங் ஸ்கிறிபடுக்கும் சலனப்படிமத்திற்கும் இடையில் வித்தியாசங் கள் உண்டு. அதாவது எழுத்துப் பிரதியில் காணப்படுவது போன்றே திரையில் காட்சிகள் முழுக்க முழுக்க அமைவதில்லை.

சினிமா என்பது ஒரு கனவு போன்றது. அல்லது நனவோடை அனுபவம் எனவும் அதனை வர்ணிக்கலாம். இயக்கத்தில், ஒளிபாய்ச்சும் சினிமா ஒரு கற்பனைக் கனவு, திரைக்கதை எழுதியவரும் நெறியாளரும் கனவு காண்பவர்கள், தமக்கு விருப்பியவாறு அவர்கள் காட்சிகளை அமைக்கிறார்கள். காலத்தைக் கரைக்கிறார்கள்.

நினைவோட்டப் பாதையில் அழைத்துச் செல்கிறார்கள். நாடகத் தன்மையை உண்டு பண்ணுகிறார்கள். சிறிய விஷயங்களையும் முக்கியமாகக் காண்பிக்கிறார்கள். அர்த்தங்களை விரிவுபடுத்துகிறார்கள். [illegible] எழுப்புகிறார்கள். சித்து விளையாட்டுக்காரர்கள் இவர்கள், நெறியாளரும் பார்வையாளரும் படத்தின் மூலம் தொடர்பு கொள்கின்றனர். ஒரே சமயத்தில் நெறியாளர் பார்வையாளராகவும் படத்தைக் கற்பனை பண்ணுகிறார். பார்வையாளரும் நெறியாளர் கண்களுக்கூடாக படத்தைப் பார்க்க முயல்கிறார். இது சினிமாவின் பிரத்தியேக பண்பு. இதனால்தான் பொதுமக்கள் கண்டு களிக்கத் தக்க சிறுபான்மையாளரின் கலையக சினிமா திகழ்கிறது என்று சிலர் கூறுவர்.

'ஷொட்'டுகள் என்பது ஒரு எழுத்துப் படைப்பில் காணப்படும் வசனங்கள் போன்றவை. அல்லது, இசையில் காணப்படும் மதுர நயங்கள் போன்றவை 'ஷொட்' வடிவத்தில் 'ஸ்கிறிப்டுகள்' எழுதப்படுகின்றன. 'ஷொட்'டுகள் அமையும் பாங்கில் கதை படமாக்கப்படுகிறது. அதன் பின்னர் தொகுக்கப்படுகிறது.

எந்தவொரு படத்தையும் அளவிட 'ஷொட்' பற்றிய அறிவும் அத்தியாவசியம் ஆகும். நவீன சினிமாவில் நடிகர்களின் சலனம், கமெராவின் சலனம், ஒளியமைப்பின் சலனம் ஆகியவை மூலம் குறிப்பிட்ட 'ஷொட்'டுகளுக்கிடையில் கூடுதலான படிம மாற்றங்கள் நிகழ்கின்றன.

**கே.எஸ்.சிவகுமாரன்**

படத்தைக் காண்பது ஒன்று, அதனைப் பிரக்ஞையுடன் நுகர்வது மற்றொன்று. புத்தி பூர்வமான கட்புலக்கூர்மை வேண்டும். உதிரி -உதிரியான எமது அனுபவங்களின் வேகம், அடக்கம், பன்முகம் ஆகியவற்றை சினிமா சித்தரித்துக் காட்டுகிறது. போராட்டங்களைச் சித்தரிக்கும் அதே வேளையில், அவற்றைத் தடுக்கவும் அவற்றில் சம்பந்தப்படவும் உதவும் சாதனமாக, சினிமா அமைவதனால் பயன்தருவதாகவும் அறிவு புகட்டுவதாகவும் சினிமா ஒரே நேரத்தில் செயற்படுகிறது.

எழுத்துப் பிரதியில் உள்ளவற்றை சினிமா பெரிதுபடுத்திக் காட்டுகிறது. படம் பிடிக்கப்படும் முறையினால் போராட்டம் கதையில் இருக்கிறதா இல்லையா, வலியுறுத்தப்படுகிறதா இல்லையா என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

நவீன சர்வதேச திரைப்படங்களை நாம் ஆராய்ந்தால், இந்த சினிமா எவ்வளவு அற்புத சக்தி வாய்ந்தது என்பதனை நாம் உணர முடியும்.

நன்றி:- 'அசையும் படிமங்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஊருடன் கூடி வாழ்

அந்த அடர்ந்த காட்டிலே பயங்கர மிருகங்களுடன் வித விதமான பறவைகள் வசித்து வந்தன. அந்தப் பறவைகள் எல்லாம் தங்கள் இனம், நிறம், குரல் ஆகியவற்றை மறந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன.

ஆனால் அங்கு வசித்த கிளி ஒன்றும் குயில் ஒன்றும் காட்டில் இருந்த ஏனைய பறவை இனங்களோடு சேர்வது கிடையாது.

உலகிலேயே உயர்வானவன் மனிதன். அந்த மனிதனைப் போல் தன்னால் பேசமுடியும் என்ற கர்வம் கிளிக்கு இருந்தது.

மனிதனே, தன் குரல் இனிமையைப் பாராட்டிப் பேசுகிறான் என்ற கர்வம் குயிலுக்கு. இதனால் கிளியும் குயிலும் ஏனைய பறவைகளை விடத் தாம் தான் உயர்ந்தவை என்று நினைத்துக் கொண்டிருந்தன.

மற்றப் பறவைகளைப் போல் இவை கூடு கட்டுவதில்லை. கிளி ஏதாவது மரப் பொந்துகளில் வசிக்கும். குயில் ஏதாவது மரக் கிளைகளில் இருக்கும். ஏனைய பறவைகள் இவற்றிடம் எங்காவது கூடுகட்டி வாழும்படி கூறின. ஆனால் அதனை இவையிரண்டும் கேட்பதில்லை. கிளி எப்போதும் மனிதர் பேசுவது போலப் பேசிக் கொண்டிருக்கும். குயிலோ எப்போதும் இனிமையாகக் கூவிக் கொண்டிருக்கும்.

"ஊருடன் கூடிவாழ்" என்பது முதியோர் வாக்காகும். இதனை இரண்டு பறவைகளும் மதிக்கவில்லை. தவறு செய்தால் தண்டனை கிடைக்குமல்லவா? இவற்றிற்கு ஒரு வேடன் வடிவிலே ஆபத்து வந்தது.



அந்தக் காட்டிற்கு வேடன் ஒருவன் வந்தான். அப்போது அவனுக்கு கிளி பேசும் பேச்சும், குயில் கூவும் ஓசையும் கேட்டது. அவை இரண்டையும் தன் இருப்பிடத்திற்குக் கொண்டுசெல்ல விரும்பினான் வேடன்.

கிளியும், குயிலும் தனியாக இருந்ததால் அவற்றைப் பிடிக்க அதிகம் சிரமப்படத் தேவையில்லை என்று நினைத்தான்.

மறு நிமிடமே வலையைத் தயார் செய்து இரண்டையும் பிடித்துக் கூண்டில் அடைத்துவிட்டான்.

மற்றப் பறவைகளின் சொற் கேளாமல் அவைகளோடு கூடி வாழாமல் இருந்ததால் கிளியும் குயிலும் வேடனிடம் இலகுவாக அகப்பட்டுக் கொண்டன.

எல்லோருடனும் ஒற்றுமையாகக் கூடி வாழ்ந்திருந்தால் தமக்கு இந்த நிலமை ஏற்பட்டிருக்குமா? என அவையிரண்டும் வருந்தின. இனி வருந்தி என்ன பயன்?

ச. நிரேஸ்,
தரம் : 9M
மட் /தே.ம. வித்தியாலயம்.
தேத்தாத்தீவு.

## யானை



இது ஒரு யானை. இது மிகவும் அழகானது. இதன் தும்பிக்கை மிகவும் அழகானது. இதன் காதுகள் சுளகு போன்றவை. இதனின் கால்கள் உரல்களைப்போன்று உள்ளது.

இதற்கு நீண்ட தந்தம் உண்டு. இதன் கண்கள் மிகவும் கூர்மையானவை. கண்கள் இரண்டும் மிக மிகச் சிறியவை.

தனுசியா சண்முகரெட்ணம்

## நாடுகளும் வானூர்தி நிறுவனங்களும்



| | |
|---|---|
| எயர் இந்தியா | – இந்தியா |
| எயர் லங்கா | – இலங்கை |
| அலிதாலியா | – இத்தாலி |
| பின்எயார் | – பின்லாந்து |
| சபீனா | – பெல்ஜியம் |
| பிரிட்டஸ் எயார்வேல் | – இங்கிலாந்து |
| கத்தே பசிபிக் | – ஹொங்கொங் |

சி. மிருத்திகன்,
தரம் - 10K,
மட் /பழுகாமம்
ம.ம. வித்தியாலயம்.

## மொழிச் செய்திகள்

- ஹவாய் மொழியில் 12 எழுத்துக்களே உள்ளன.
- வத்திக்கான் நகரில் இத்தாலி, இலத்தீன், ஃபிரெஞ்சு ஆகிய 3 மொழிகள் வழக்கத்திலுள்ளன.
- உலகின் முதல் நாவலான செஞ்சிகதை ஜப்பான் மொழியில் வெளிவந்துள்ளது.
- உலகிலே மிகவும் வேகமாக பேசக் கூடிய மொழி ஃபிரெஞ்சு. ஒரு நிமிடத்திற்கு 350 வார்த்தைகள் பேசலாம்.
- உலகில் முதல் கலைக்களஞ்சியம் சீன மொழியில்தான் வெளிவந்துள்ளது.

நாகேந்திரன் விஜயதாஸ்
மட்/பட்டிருப்பு ம.ம. வித்தி. களுவாஞ்சிகுடி.

## சுருக்க குறியீடுகளும் அதன் விளக்கமும்



**P.L.O** Palestine Liberation organisation- பலஸ்தீன விடுதலை இயக்கம்

**I.R.A** Lrish Republican Army - அயர்லாந்து குடியரசுப்படை

**B.B.C** British Broad Casting Corporation- பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

**C.I.A** Central Intelligance Agency- மத்திய உளவு ஸ்தாபனம்

**C.A.R.E** Committee For American Remittance Everywhere- எல்லா நாடுகளுக்குமான அமெரிக்க நிவாரண உதவி

**E.C.M** European Common Market- ஐரோப்பிய பொதுச் சந்தை

**C.A.T.T** Central Agreementon Trade and Tariffs சுங்கத் தீர்வை வர்த்தகம் பற்றிய உடன்படிக்கை

**C.M.T** Creenwich Mean Time- கிறீன்விச் நேரம்

**I.B.R.D** Intenational Bank Of Recon struction Development- சர்வதேச புனரமைப்பு வங்கி

**Y.M.H.A** Young Mens Hindu Association- இந்து இளைஞர் மன்றம்

## ஒரு பொருள் பன்மொழி

**அணிதல்:-** சூடுதல், தரித்தல், புனைதல், பூணுதல், அலங்கரித்தல்.
**அம்பலம்:-** பொதுவில், சபை, மன்றம்.
**அன்பு:-** கணை, அத்திரம், சரம், பகழி, பாணம், வாளி.
**ஆகாயம்:-** அண்டம், வானம், விண், உம்பர், வான், விசும்பு, மாகம், மாதிரம், அந்தரம், வெளி.
**ஆசை:-** இச்சை, ஆவல், ஆர்வம், நகை, விருப்பு, வேட்கை, அவா, வாஞ்சை, பற்று, விழைவு, வேட்பு மோகம், காதல்.
**ஆபரணம்:-** அணி, ஆரம், இழை, கலம், கலன், நகை, பணி, பூண், பூடணம்.
**ஈகை:-** அளி, வன்மை, கொடை, உபகாரம், தானம்.
**உடம்பு:-** உடல், தேகம், காயம், சடலம், சதிரம், யாக்கை, சரீரம்.
**உண்மை:-** வாய்மை, சத்தியம், மெய்.
**ஊமை:-** ஊமன், மூகன், மூகை, மூங்கை.

வானதி ரவிச்சந்திரா
தரம்- 5V
வின்சன் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை.

## கண்டு பிடியுங்கள்-38

இராமன் 10 லவ்பேட்ஸ் ஒரு கூட்டில் வளர்த்து வந்தான். ஒவ்வொரு சனிக்கிழமையும் அவற்றிற்குத் தேவையான தானியத்தை அவற்றிற்கான தட்டில் இடுவான். 10 லவ்பேட்ஸ்களுக்கும் 100 கிராம் தானியம் இடுவான். மேலதிகமாக ஒரு வல்பேட்சும், 10 கிராம் தானியமும், ஒரு சனிக்கிழமையும் சேர்க்கப்பட்டால். அக் கூட்டிலுள்ள தானியம் எத்தனை நாட்களுக்குப் போதும்?

இதற்கான விடையினை தபாலட்டையில் மாத்திரம் எழுதி உங்கள் பாடசாலை முகவரியுடன் 15.02.2002க்கு முன்பாக அனுப்பி வைப்பதோடு தினக்கதிர் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும்.

கடந்த வாரம் கண்டுபிடியுங்களுக்கான சரியான விடை' 8 வினாடிகள்' என்பதாகும்.

இவ்விடையினை ஏராளமான தம்பி, தங்கைகள் எழுதி அனுப்பியுள்ளனர். அதில் பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்.

ச. ஜெயதீபன்,
மட்/ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வீதி,
மட்டக்களப்பு.

### பாராட்டுக்குரியவர்

1. ஜோயல் நிறோஜன்,
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி.

2. பொ. நவநீதன்,
குறுமண்வெளி - 11,
களுவாஞ்சிகுடி.


3. ர. ஜெய்தரன்,
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை.

4. ஆர். மிதுஷன்,
ம[illegible] வித்தியாலயம்,
[illegible]

5. இ. அபிநயா,
k /செங்கலடி மத்திய கல்லூரி.

6. அருள் பிரசாந்,
வாவிக்கரை வீதி -2,
மட்டக்களப்பு.

கண்டுபிடியுங்கள்-38
தினக்கதிர் வாரவெளியீடு,
த.பெ.எண்:- 06,
இல:- 155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.



1. எவன் ஒருவன் வாய்ப்புக்களை தவற விடுகிறானோ அவன் தன்னையே இழக்கிறான்.
2. ஒருவர் மற்றவர்களோடு கொஞ்சம் பேச வேண்டும். தன்னோடு அதிகம் பேச வேண்டும்.
3. வெற்றி நமது வாழ்கையை நாளாக அளவிடுவதில்லை மாறாக நமது தடைகளை தாண்டுவதன் மூலமே அளவிடப்படுகின்றது.
4. சிந்திப்பாயானால் நிதானமாகச் சிந்தி. செயற்படுவாயானால் கவனமாகச் செயற்படு. விட்டுக்கொடுப்பாயானால் பெருந்தன்மையோடு விட்டுக்கொடு

[illegible]வனீதா,
ஆண்டு - 10
[illegible]விக்னேஸ்வரா வித்தி.,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் இலக்கிய நிகழ்வுகள் புத்துயிர் பெறவேண்டும்

இலக்கியம் தொடர்பான செயல்பாடுகளை ஒருங்கே தொகுத்து நோக்கும் போது. அவை இரு நிலைப்பட்டதாக உள்ளதை காணலாம்.

1. படைப்பாக்க செயல்பாடுகள்
2. படைப்பின் மீதான எதிர்வினை செயல்பாடுகள்

படைப்பாக்கச் செயல்பாடு முதன்மையானதும், அனைத்து இலக்கியச் செயல்பாட்டுக்கும் ஆதாரமாக அமைவதுமாகும். இது படைப்பாளி - படைப்பு - வாசகன் - எனும் தொடரில் அமைவது. படைப்பாளியிடமிருந்து வெளிப்படும் படைப்பு, வாசகனை சென்றடைவதுடன் இலக்கியச் செயல்பாட்டின் முதல் கட்டம் நிறைவடைகிறது. இலக்கியத்தின் ஊடகம் எழுத்து என்பதால் இம் முதல்கட்ட இலக்கிய செயல்பாடு எழுத்து வடிவில் மட்டுமே நடைபெற முடியும்.

படைப்பின் மீதான எதிர்வினை இரண்டாம் கட்ட இலக்கியச் செயல்பாடாகும். இது படைப்பை எதிர்கொள்ளும் வாசகனிடம் இருந்து தொடர்கின்றது. வாசகன் - எதிர்வினை - படைப்பாளி எனும் வகையில் இது நடைபெறும். எதிர்வினை என்பது, வெறும் அபிப்பிராயம் முதல் ஆழமான விமர்சனம் வரை பலதரப்பட்டவை. இப்பலதரப்பட்ட எதிர்வினைச் செயல்பாடுகளும் இரு விதங்களில் இடம் பெறலாம்.

1. எழுத்து வடிவிலானவை
2. இலக்கிய நிகழ்வுகள் முலமானவை

எழுத்து வடிவிலான இலக்கியம் தொடர்பான எதிர் வினை செயல்பாடுகள், பல பெயர்களில் உள்ளதை நாம் காணலாம். நூலுக்கான முன்னுரை, அணிந்துரை, நூல் அறிமுகக் குறிப்பு, நூல் மதிப்பீடு, விமர்சனம், காலவாரியான அல்லது இலக்கிய வகைவாரியான ஆய்வுகள் வரை பல தரப்பட்டவை. படைப்புக்கு எதிர்வினையாக உருவாகும் விமர்சனம் ஒன்று, தன் ஆழங்களாலும் தனித்துவத்தாலும் அதுவே ஒரு படைப்பாகும் போது அது படைப்பின் படைப்பாகிறது.

இலக்கிய நிகழ்வுகள் இரண்டாவது எதிர்வினைச் செயல்பாடாகும். நூல் வெளியீட்டு அறிமுக நிகழ்ச்சிகள், புத்தகக் கண்காட்சிகள், கருத்தரங்கு, விமர்சன அரங்கு, கலந்துரையாடல்கள், விவாதஅரங்கு, எழுத்தாளர் சந்திப்பு, ஒன்று கூடல்கள், இலக்கிய பட்டறைகள், இலக்கிய விழாக்கள், இலக்கிய மகாநாடுகள்..... இவற்றையே பொதுவாக இலக்கிய நிகழ்வுகள் என நாம் குறிக்கிறோம். சாதாரணமான ஒரு கருத்தரங்கில் இருந்து உலகளாவிய ரீதியிலான மாநாடுவரையிலான இவ்விலக்கிய நிகழ்வுகள் படைப்பாக்க முயற்சிக்கும், இலக்கிய நுகர்வுக்கும் பல கோணங்களில் வளம் சேர்த்து வருகின்றது.

**-வாசுதேவன் -**

(1) எழுத்தாளருக்கு புது உத்வேகத்தை இவை வழங்குகின்றன. எழுத்து முயற்சி மூளை உழைப்புடன் கடுமையான உடலுழைப்பையும் கோரி நிற்பது. நாளாந்த கடமைகள் வலுவில் பாதியை, ஏன் முழுவதையும் உறிஞ்சிவிடும் போது எழுத்துக்கு தன்னை அர்ப்பணிக்க முடியாமல் எழுத்தாளர் அடிக்கடி சோர்வடைதல் இயல்பு. இச்சோர்வை களைந்து புது வேகத்தை இலக்கிய நிகழ்வுகள் வழங்குகின்றன.

(2) அடிக்கடி இலக்கிய நிகழ்வுகள் நடைபெறும்போது அந்த ஊடாட்டத்தின் வழி ஆரோக்கியமான இலக்கியச் சூழலொன்று கனிவடைகிறது.

(3) எழுத்தாளர் கலைஞர்களை நேரில் அறிமுகம் கொள்ளுதல், அவர்களது படைப்பை மேலும் புரிந்து கொள்ள உதவுதல்.

(4) புதிய எழுத்தாளர்களுக்கு எழுத்து முயற்சியில் உள்ள பிரமைகள் தகரவும், சாத்தியக் கூறுகளை இனம் காணவும் அதன் மூலம் தன்னம்பிக்கை உருவாகவும் வாய்ப்பு ஏற்படல்.

இன்னும் இலக்கிய நிகழ்வுகளின் சாதகங்களை கூற முடியும். மட்டக்களப்பில் சில ஆண்டுகளாகவே இலக்கிய நிகழ்வுகள் சூனியம் அடைந்திருக்கிறது. 90 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கடந்த பத்து வருடத்தில் முதல் 5 அல்லது 6 வருடங்கள் இலக்கிய நிகழ்வுகள் களைகட்டியிருந்தன எனச் சொல்ல வேண்டும். ஆரம்ப வருடங்களில் வாசகர் வட்டம் மட்டும் நிகழ்ச்சிகளை நடாத்தி வந்தது. பின்னர். கலை இலக்கியப் பேரவை, மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம், விமோசனா, விருதுகள் பூவரசுகள், மண்முனை வடக்கு கலாசார பேரவை என்று பல இலக்கிய அமைப்புகளும் போட்டி போட்டுக் கொண்டு நிகழ்ச்சிகளை நடாத்திவந்தன. வாரந்தோறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி தவறாமல் நடைபெறும் அளவுக்கு நிலைமை நன்றாயிருந்தது. சில சமயங்களில் ஒரே நாளில் இரண்டு மூன்று நிகழ்வுகளும் நடைபெற்றதுண்டு. நல்லதோ கெட்டதோ பல வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. ரசிக்கத்தக்க பல சண்டைகள் நடந்தன. ஆனால் அவையெல்லாம் எமது இலக்கிய முயற்சிகளை செயல் நிலையில் வைத்திருக்க அன்று பெரிதும் உதவின என்பதை இப்போது உணர முடிகிறது.

இன்று இலக்கிய நிகழ்வுகள் எதுவும் பெரிதாக இடம்பெறாமல் போனமைக்கு சில காரணங்களை ஊகிக்க முடிகிறது.

(1) ஆனந்தனின் மறைவு. ஆனந்தன் வாசகர் வட்டத்தை சேர்ந்தவர் எனினும், ஏனைய இலக்கிய அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு ஊக்கியாக திகழ்ந்தார். அவரது மறைவு வாசகர் வட்டத்தின் செயற்திறனை வெகுவாகக் குறைத்து விட்டதுடன் ஏனைய அமைப்புக்களையும் சோர்வடையச் செய்தது.

(3) பல இலக்கிய அமைப்புக்களிலும் அங்கம் வகித்த பெரும் பாலாருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்த அளவுக்கு

## இலக்கிய மைதானம்

கலை இலக்கியம் தொடர்பான நிலைப்பாடுகள் இருக்கவில்லை. வாயு ஏற்றப்பட்ட பலூனின் பயணத்தைப் போன்ற இந்த இலக்கற்ற தன்மை வாயு (ஆர்வம்) இறங்கியதும் சப்பென்று போயிற்று.

(4) எமது சமகால சமூக சூழல், சமூகத்தின் முன் தம்மை தனித்துவமாக அடையாளம் காட்டிக் கொள்வதிலிருந்து ஒதுங்கிங்கொள்ளும் மனோபாவத்தை வளர்த்து விட்டுள்ளமை.

இருபத்தோராம் நூற்றாண்டின் வாயில் இது. மட்டக்களப்பில் மீண்டும் இலக்கிய நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்கப் போவது யாரோ?

## காதலர் தினம்

காதல் பற்றிப் பேசவும்
காதலர்க்கென்றொரு
திருநாள்....
இத் திருநாளில்
வாழ்த்துக்களையும்
பரிசுகளையும் மட்டுமே
பரிமாறாது
தம் காதல் வாழ
பிரார்த்தித்து –
தம்மை காணிக்கையிடுவதும்
காதலர் தினம்தான்.

எமக்கு முன்
மாண்டு போன
காதலர்களை
நினைவு கூர்வதும்
இத் தினத்திலேதான்!

காதலர்கள் தோற்றாலும்
காதல் எப்போதும்
எங்கேயும் எவரிடமும்
தோற்றதில்லை!

அன்பான காதலரே!
பொன்னான
இத் திருநாளில்
மகிழ்ச்சியுடன்
மனங்களையும்
பரிமாறிக் கொள்ளுங்கள்!

**ம.சுஷாந்தினி**



### பாராட்டுக்குரியவை

## குண்டு மழையால்....

பொழிந்த
குண்டு மழையில்
குடியிருந்த
குடும்பமே
பலியாகியது!
குடும்பம்
பலியான பின்பு
குடியிருந்த இல்லம்
பாழாய்ப்
போனது.

### போட்டி இல:-35 பரிசுக்குரியது

## தாமத மேன் சமாதானம்!

குண்டு வீசி குடியிருப்பு அழிந்த பின்னும்
கொடுஞ்சிறையில் செந்தமிழர் வெந்த பின்னும் - இதை
கண்டபின்னும் சமாதானம் தாமதித்தால்
கள முனைக்கு செல்வதற்கே துணிவுகொள்வோம்.

**வி.சிறிதரன்,
கோவில் போரதீவு,
பெரிய போரதீவு.**

## காத்திருக்கும் வீடு

கனவுகள் பல கண்டு
கட்டியெழுப்பப் பட்ட வீடிருக்க
வீட்டிலிருந்தோர் விபரம் தெரியாது
விரைந்து செல்லும் நாட்கள் தான் எத்தனை யெத்தனை
காலமே பதில் சொல்வாயோ
வீட்டாரின் வரவுக்காய் கட்டவிழ்ந்த நிலையிலும்
காத்து கிடக்கும் வீட்டிற்காக.

**தி.வினிதா,
காளி கோயில் வீதி,
ஊறணி,
மட்டக்களப்பு.**

## காத்திருப்பு

என் தாய் தந்தையரை இழந்தேன்,
சகோதரர்களை இழந்தேன்,
இன்று என் ஒரேயொரு உடமை யாகிய
வீட்டையும் இழந்து நிற்கின்றேன்.
ஒலிக்கிறது சில நிமிடங்களில்
நூறு நாள் வேலைத் திட்டம்
கிடைக்குமா,..? எனக்கும் ஒரு வீடு.

**எஸ். பரமேஸ்வரி,
முனைக்காடு- கிழக்கு,
கொக்கட்டிச்சோலை.**

## பொலிவிழந்து நிற்பதென்ன?

பொட்டிழந்து பூவிழந்த மங்கையர் - போல்
நீ பொலிவிழந்து நிற்பதென்ன
தரணியிலே தமிழன் படும் பாட்டை
உலகறியச் செய்யவா?

**அ.சாந்தினி,
இல:46,
வாவிக்கரை. வீதி-2,
மட்டக்களப்பு.**

## ஈழ மனிதன்

குண்டு மழை தொடர்ந்ததால்
மாரி மழை குறைந்ததோ!
மனைகளெல்லாம் தகர்ந்ததால்
மயான வீதி வந்ததோ?
இனி...?
ஆதி மனிதன் குகையைத்தான்
ஈழத்தமிழன் தேடணுமோ?

**ர.ராஜகோபால்,
இல, 146, புகையிரத வீதி
மாமாங்கம்.**

## யுத்தத்தின் அவலம்

அன்பிற்கு அடைக்கலமாய்,
ஆனந்தத்தின் ஆலயமாய்,
இன்பத்தின் இருப்பிடமாய்,
உறவுகளின் உறைவிடமாய்,
மிளிர்ந்த நீ- இன்று
அழகிழந்து, ஆனந்தமிழந்து,
இடிந்து நொறுங்கிய
மாயம் என்னவோ?


**க.சக்திதாஸ்,
பிரதான வீதி,
கிரான்,
மட்டக்களப்பு.**



**இப்படத்தைப் பிரதிபலிக்கும் கவிதையினை எழுதி அனுப்புங்கள். அனுப்பும் கவிதைகள் வார்த்தைகளில் எண்ணிக்கையில் அதிகம் இல்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து கீழ்க்காணும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்புங்கள். சிறந்த கவிதைகளுக்கான நல்ல, தரமான கவிதைப் புத்தகப் பரிசு காத்திருக்கிறது. மேலும் உங்களுடைய கவிதைகளை எதிர்வரும் மாசி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

கவிதைப் போட்டி-36
தினக்கதிர் வாரவெளியீடு
த.பெ.எண்:- 06
மட்டக்களப்பு

## சினிமா மயக்கம்



வரவேற்பறையில்
வர்ணத் தொலைக்காட்சி
பெட்டி எதிரே
வட்டமாயிட்ட அமர்வுகள்
அதில் வயோதியர் முதல்
சிறுவர் வரை மெய்
மறந்து சினிமாவுடன்
சங்கமிக்கும் நெஞ்சங்கள்.

சினிமா மயக்கத்தில்
இருக்கும் வேளையில்
உற்றார் உறவினர்
யார் வந்தாலும்
மனம் விட்டுப் பேசி
மகிழ மறந்த இவர்களை
எப்படிச் சொல்லுவது?

ஒவ்வொரு மனிதனும்
ஒவ்வொன்றுக்கும் அடிமை
இவர்கள் சினிமாவுக்கு!

**ர.ராஜகோபால்,
மாமாங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகாத தமிழில் "சாவித்திரி" குறுங்காவியம்

புதுக்கவிதை கொடிகட்டிப் பறக்கும் இக்காலத்தில் மரபுக் கவிதையில் ஒரு காவியத்தை யாத்திருப்பதும் கணவன், உயிர்காத்த கற்புக்கரசி சாவித்திரியின் கதையை அக்காவியத்தின் கருப்பொருளாகக் கொண்டிருப்பதும், துணிச்சலான காரியம் மட்டுமல்ல, காலத்தின் தேவை என்று கூடச் சொல்லலாம்.

கீழைத்தேய இந்து மக்களின் ஒழுக்க விழுமியங்களை உருவாக்கி பண்பாட்டைப் பேணி வளர்ப்பதில் புராண இதிகாசங்கள் மறைமுகமான பங்களிப்பைச் செய்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இவ் விழுமியங்களுள் 'கற்பு' என்னும் விழுமியம் பெண்களைக் பொறுத்தவரை, உயிரினும் மேலான ஒன்று.




''பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின'' (குறள்)

இத்தகைய கருத்துக்கள் உருவாகி, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த பின்னரும் 'கற்புநெறி' என்பது நமது பெண்களுக்கு இன்றும் உயிரினும் மேலானதாகக் கருதப்படுகிறது. பழைய தலைமுறைக்கு அதை நினைவூட்டவும் புதிய தலைமுறையினருக்கு அதை வலியுறுத்தவும் இந்நூல் அவசியமாகின்றது.

மரபுக் கவிதையில் செய்யுள் யாப்பில் கட்டுப்பாடுகள் பல உள்ளன. சீர்,தளை, சந்தம், ஓசை எதுகை, மோனை எனப் பல சங்கதிகள் அவற்றுள் அடங்குகின்றன.

சிங்கத்தின் பாலைத் தங்கக் கோப்பையில் வைக்க வேண்டும் என்பார்கள். அவ்வாறே உயர்ந்த கவிதை சிறந்த செய்யுள் யாப்பில் அடங்குவதே சிறப்பு. அதற்கமை வாக இந்நூலின் செய்யுள்கள் அமைந்துள்ளன வெண்பா, விருத்தப்பா, (அறுசீர், எண்சீர்) முதலிய பாவகைகள் கவிதைச் சிமிழ்களாக அமைந்துள்ளன. 23 அத்தியாயங்களும், 160 செய்யுள்களும் கொண்ட இந்நூலில் செய்யுள்கள் யாவும் எளிய நடையில், எவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகை யில் அமைந்துள்ளன. கதையை வேகமாக் நகர்த்திச் செல்லும் உத்தியால், வாசகரை நூல் சிக்கெனப் பற்றிக் கொள் கிறது. நூலைப் படித்து முடிக்கும் வரை கீழே வைக்கத் தோன்றாத வகையில் கவிதை நடை சிறப்பாக அமைந்துள்ளது. மாதிரிக்குச் சில:

பார்தனில் பரதகண்டப் பகுதியை ஆட்சி செய்து
நீர்நில வளங்களோடு நீதியும் செலுத்தி நின்று
கார்முகிற் போல பா[illegible]ம் பாராதென்றும்
சீர்பெறு கன்னனொ[illegible] சிறப்புடன் வாழ்ந்தானன்றோ.
கற்பினால் பெண்கள் செய்த காரிய சாதனைகள்
பொற்பினில் பெரியதாகும் பூசைக்குமுரியதாகும்
நற்றமிழ் மக்கள் வாழ்வை நானிலம் போற்றச் செய்யும்
பெற்றியால் நமது பெண்கள் பெருந் தெய்வமாகினாரே
ஆயிரக்கணக்கில் இங்கே ஆண்டுகள் சென்றபோதும்
நாம் பெறும் பெருமை எந்த நாடுதான் பெறுவதாகும்
மாயிரு ஞாலத் தென்றும் மகிமையாய் வாழச் செய்த
வெயுறு பெண்கள் என்றும் விளங்கிடும் தெய்வமாகும்.

பெண்களைத் தெய்வமாக்கும் அணுகு முறையில் சிலர் கருத்து முரண்படக்கூடும். ஆனால் கண்ணதாசனின் கருத்து ஒன்று இதற்குத் தகுந்த பதிலாக அமையும். ''தெய்வம் என்றால் அது தெய்வம், சிலை என்றால் வெறும் சிலைதான் உண்டென்றால் உண்டு; இல்லை என்றால் அது இல்லை, இந்நூலாசிரியரைப் பற்றி அறிஞர் பெருமக்கள் கூறியுள்ள சில கருத்துக்களும் இங்கு நோக்கற்பாலன.

''செல்வி.திருமலர்ப்பாக்கியம் சிவசிதம்பரப்பிள்ளை அவர்களால் யாக்கப் பெற்ற ''சாவித்திரி'' என்ற கவிதைநூல் சோகம், தாகம், வேகம் என்ற மூவகையானும் எழுந்து மக்கட்கு நற்பேறு அளிப்பதாக மிளிர்கின்றது. (மகா வித்துவான் F.X.C நடராசா)

''ஈழத்துக் கவிஞை செல்வி.சிதம்பரப்பிள்ளை சாவித்திரியின் கதையைச் சாகாத தமிழில் வார்த்துத் தந்திருக்கிறார். செய்யுள்கள் ஆடம்பர அலங்காரங்களின்றி எளிய தோற்றத் தோடு நடக்கின்றன. அலைகளற்ற கடலில் செல்லும் தோணி போல கதை சிக்கலின்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. (பேராசிரியர் அப்துல் ரகுமான், எம்.ஏ.பி.எச்.டி)

''செல்வி திருமலர்ப்பாக்கியம் சிவசிதம்பரப்பிள்ளை
சொல் கவிதை கேட்டே, சுழலுமென் நெஞ்சத்தை
நில்லென்று நிறுத்தி நீள் கவிதை திறன் வியந்து
சொல் உயர்த்திக் கொண்டே சொன்னேன் சுவை நயந்து''
(பண்டிதர் மகா வித்துவான் வி.சீ.கந்தையா (B.O.L)

''நன்று செய்தனன் நங்கை திருமலர்
முன்றிலிற் பூத்தது போலத் தண்ணா
செந்தமிழப் பாமலர்த் தொடையல் செய்தே''
(வித்தியாரத்தினம் நவாலியூர் சோ.நடராசன்)

இப் பெருமக்கள் இப்போது உயிரோடு இல்லை.

இந்நூல் சுமார் 30 வருடங்களுக்கு முன் யாக்கப் பெற்றது. அப்போது, கையெழுத்துப் பிரதியாக இருந்த இக் காவியத்தைப் பார்வையிட்ட அறிஞர்களால் வெளியிடப்பட்டதே மேற்படி கருத்துக்கள் ஆகும்.

இக் கருத்துக்கள் நூலில், அணிந்துரையிலும், வாழ்த்துப் பாக்களிலும் இடம் பெறுகின்றன. நூலின் சிறப்புக்கு இவை உரை கல்லாகவும் அமைகின்றன. இந்நூலின் ஆசிரியை செல்வி.சிதம்பரப்பிள்ளை, ஈழத்தில் விரல்விட்டு எண்ணி விடக்கூடிய கவிஞைகளில் ஒருவர் என்பது மரபுக்கவிதை ஆக்கங்களையே உருவாக்கியவர் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

பல வருடங்களாக ஆசிரியப்பணி புரிந்து ஓய்வு பெற்ற இவர், தனது சேவைக்காலத்திலும் அதன் பின்னரும் பல பதிகங்களைப் பாடியுள்ளார். அவை சிறுசிறு நூல்களாக வெளிவந்துள்ளன.

மணி

இவை தவிர ஏராளமான கவிதை களை அவ்வப்போது யாத்திருக்கிறார் இவர் ஆசிரியையாகப் பணிபுரிந்த காலத்தில், பாடசாலை நிகழ்ச் சிகள் பலவற்றைத் தயாரித்துள்ளார். கும்மி, வில்லுப்பாட்டு, முதலிய வடிவங்களில் அமைந்த அப்படைப்புக்கள் போட் டிகளில் பரிசுகளையும் பெற்றுள்ளன.

ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில், மரபுக் கவிதையைப் பேணி வளர்க்கும் இவர் ஏனையோருக்கு ஒரு முன்னோடியாகவும் அமைகிறார். ஆனாலும் ஈழத்து இலக்கியப் பரப்பில் அவரது தடங்கள் உரிய முறையில் பதிவாகவில்லை. அன்று போல் இன்றும் குடத்தில் இட்ட விளக்காகவே அவர் படைப்புகள் இருக்கின்றன.

''சாவித்திரி'' காவியம், ஈழத்து இலக்கிய உலகத்திற்கு அவரைச் சரியாக இனங்காட்டக்கூடும்.

# இராகு, கேது மாற்றம் நட்சத்திரங்களின் பலன்கள்

**(2002.01.25)**

(சென்றவாரத் தொடர்ச்சி)

## மூலம்:-

அசுரர்களை அதிதேவராகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த இராகு, கேது மாற்றத்தால் நல்ல சிறப்பு பலன் உண்டாகும். பதவி தொழில் புகழ் உண்டாகும்.புதிய தொழில் முயற்சிகள் கைகூடும். வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும். மங்கள காரியங்கள் நடைபெறும் பிரிந்து போனவர்கள் ஒன்று கூடுவர். தேகசுகம் சிறப்பாக இருக்கும் வாழ்கை சந்தோசமாக இருக்கும்.

## பூராடம்:-

வருணபகவானை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு. இந்த ராகு, கேது மாற்றம் பொதுவாக நன்மை பயக்கும் கிடைக்க முடியாமல் போன பதவிகைகூடும் கடன் வரவு உண்டாகும். திருமணம் கைகூடிவரும். நண்பர்கள் ஒற்றுகூடுவர். தேகசுகம் நன்றா இருக்கும்.

## உத்தராடம்:-

விநாயகரை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் 2ம் 3ம் 4ம் பாதங்களில் பிறந்தவர்கட்கு கஷ்டங்கள் கூடிவரும். கடன் தொல்லை உண்டாகும். பதவி தாமதமாகும். பிரயாணம் தடைப்படும். திருமணம் குழம்பிப்போகும். சத்துருக்களால் துன்பம் உண்டாகும். தேககசுகம் பாதிப்படையும். விநாயகரை வழிபட்டு தோச நிவர்த்திபெறலாம்.

## திருவோணம்:-

விஷ்ணுவை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த ராகு, கேது மாற்றம் இடமாற்றம், வீடுமாற்றம் போன்ற கஷ்டங்களைக் கொடுக்கும். குடும்பத்தில் மகிழ்சி குறையும். மாணவர்கள் கல்வியில் கவனம் குறைவாக இருக்கும். வரவுக்கு மேல் செலவு கூடிவரும். மேலதிகச் செலவுகள் உண்டாகும்.

## அவிட்டம்:-

வசுக்களை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் 1ம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களை விட 3ம் 4ம் பாதத்தில் பிறந்தவர்கட்கு, நல்ல பலன்கள் உண்டாகும். தேகசுகம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்படைவர். செலவு சுமாராக இருக்கும் விட்டுப்போன உறவுகள் மீண்டும் ஒன்று சேரும.

## சதயம்:-

தர்மதேவதையை அதிதேவதையாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த இராகு, கேது மாற்றம் நல்ல பலனைக் கொடுக்கும். திருமணம் கைகூடிவரும். மாணவர்கள் பரீட்சைகளில் வெற்றி பெறுவர். விட்டுப் போனகடன் மீண்டும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தேகசுகம் நன்றாக இருக்கும். பண வரவு கூடுதலாக இருக்கும்.

## பூரட்டாதி:-

குபேரனை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு நல்ல சிறப்புப் பலன் அதிர்ஷ்டம் உண்டு. பதவி கிடைக்கும். பணம் சேரும், திருமணம் கைகூடிவரும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்படைவார்கள். பிரிந்தவர்கள் ஒன்று கூடுவார்கள். குடும்பம் நல்ல மகிழ்ச்சியாக இருக்கும்.

## உத்திரட்டாதி:-

காம தேனுவை அதிதேவதையாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு, இந்த ராகு, கேது மாற்றத்தினால் நல்ல பலன், அதிர்ஷ்டம் உண்டு. எதிர்பாராத நல்ல மங்களகரமான காரியங்கள் வாழ்கையில் ஏற்படும். பிரயாணங்கள் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி உண்டாகும். பணவரவு கூடும்.

## ரேவதி:-

சனீஸ்வரனை அதிதேவனாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு இந்த இராகு, கேது மாற்றம் நல்ல சிறப்பாகும். பதவி தேடிவரும். பணம் கிடைக்கும். புகழ் உண்டாகும். பரீட்சைகளில் வெற்றி பெறுவார்கள். திருமணம் நடைபெறும். விட்டுப்போன நண்பர்கள் வந்து சேர்வார்கள். தேக சுகம் சிறப்பாக இருக்கும். எதிர் பாராத அதிர்ஷ்டம் உண்டாகும்.

**சிவஸ்ரீ காசிமா பஞ்சாட்சரக் குருக்கள் (சோதிடர்)**
**அமிர்தகழி,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்துக்கு அளப்பரிய பங்களித்த வாகரை கல்வியில் பின் தங்கியுள்ளது

## -புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத்தளபதி-

(அலுவலக நிருபர்)

தமிழீழப் போராட்டத்தில் அளப்பரிய பங்கினை வழங்கி இன்று சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள வாகரை பிரதேசம் பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் கல்வியில் பின் தங்கிய நிலையில் காணப்படுகிறது.

இவ்வாறு கடந்த 7ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் வாகரை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாற்றை சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்தார்.

ஆகவே இப்பிரதேசத்தை கல்வி, கலாசார, சமூக, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றுவதற்கு எதிர்காலத்தில் எமது அமைப்பு விசேட கவனம் எடுக்கும். இதற்கு இப்பிரதேசத்திலுள்ள கல்வியுடன் சம்பந்தப்பட்டவர்கள் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும், அதற்கான திட்டங்களைத் தயாரித்து அறிக்கைப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

இக் கூட்டத்தில் மட்டு-அம்பாறை புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் றெஜினோலட், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணபவான், கோட்டக் கல்வி அதிகாரி என்.குணலிங்கம், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டம் மட்/ஆலங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் றமேஸ் கலைச்செல்வனின் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.

ஆண்டான்குளக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் சேனாதிபதி தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் ஒன்றான கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேசத்தின் துரித கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நடாத்திய இக் கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகளின் கல்குடா கல்வி வலயக்கல்விப் பொறுப்பாளர் தாயகன், எதிர்காலத்தில் இப் பிரதேசத்தின் கல்வியைஅபிவிருத்தி செய்யும் பொறுப்பு இங்குள்ள அதிபர் ஆசிரியர்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது.இதற்கான வளங்களை தாம்பெற்றுத் தருவோம் என்றார்.

ஏற்கனவே இப் பிரதேசத்தின் ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக இங்குள்ள பாடசாலைகளின் விபரங்கள் திட்டப்பட்டுள்ளதுடன், பாலர் பாடசாலை ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான ஓர் நேர்முகப் பரீட்சையையும் நடாத்தியுளளாம்.

உரிய பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் கல்வி அபிவிருத்திக்கு தாம்இப் பிரதேசத்திற்கு முன்னுரிமை வழங்கவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.குணலிங்கம், கல்குடா கல்விவலயக் கலிவிப் பணிப்பாளர் எஸ். சரவணபவான் ஆகியோரும் உரையாற்றினர்.

# சர்வதேச அரசுகளின் அழுத்தம், பேச்சுவார்த்தை மேடையில் தமிழ்த்தரப்பைப் பலவீனப்படுத்தும்!

## போராட்டத்தின் நியாயத்தை நாம் விளக்க வேண்டும் என்கிறார் கஜேந்திரகுமார்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு சர்வதேச ரீதியாக தமிழ்த் தேசியப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, புலிகள் பயங்கரவாதிகள் என்ற அபிப்பிராய அலையினைத் தோற்றுவிக்கும் பிரசாரப் போரில் ஈடுபட்டது. இப்பிரசாரப் போரின் விளைவாகவே சில மேலுலக நாடுகள் புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்து அதனை தடைசெய்ய முயன்றன.

தமிழ்த் தேசியப் போராட்டத்திலே, சில முக்கியமான தமிழ்த் தரப்புப் பிரதிநிதிகளாகத் திகழும் புலிகள் மீது சர்வதேச அரசுகள் கொடுக்கும் அனாவசிய அழுத்தம் பேச்சுவார்த்தை மேசையில் தமிழ்த் தரப்பினை பலவீனமடையச் செய்து விடும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

இவ்வாறு அண்மையில் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டு நாடு திரும்பியுள்ள கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

புலிகளும் அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டு உடன்பாடு ஒன்றிற்கு வருகின்ற இன்றைய காலகட்டத்தில் சர்வதேச அரசுகள் புலிகள் தொடர்பான தமது முன்னைய நிலைப்பாட்டை மீளப் பரிசீலனை செய்ய வேண்டும். ஏனெனில், பேச்சுவார்த்தை மேசையில் ஒரு தரப்பினர் வெளி அழுத்தங்களினால் பலவீனப் படுத்தப்படுவதென்பது நிரந்தர சமாதானத்திற்கு வழிசமைக்கப் போவதில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்தைக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினராகிய நாம் சர்வதேச உலகிற்கு தமிழ்த் தேசியப் போராட்டத்தின் உண்மையான நிலைப்பாட்டை எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதிலும் குறிப்பாகப் பாராளுமன்ற உறுப்பினராகிய நாம் அமைப்பு ரீதியாகச் செயற்படும் போது சர்வதேச அரசுக்குக் குறிப்பிடத்தக்களவு அழுத்தத்தினைக் கொடுக்கவியலும். இந்த வகையில் கூட்டமைப்பு அங்கத்தவர்களாகிய நாம் தீவிர பங்களிப்புச்செய்ய முடியும்.

எனது மூன்று வாரகால அவுஸ்திரேலிய, நியூசிலாந்து வெளிநாட்டுப் பயணத்தின்போது மேற்குறித்த பணியில் என்னால் கூடுமானவரை ஈடுபட்டேன். இவ்வாறு தினக்கதிருக்கு வழங்கிய பிரேத்தியேக செய்தியில் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் குறிப்பிட்டார்.

மேலும் அவரிடம் நடைபெறப்போகும் உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பாக வினவப்பட்டபோது, அரசு புலிகளுடன் பேசி புதிய நிர்வாகக் கூட்டமைப்பு ஒன்றினை வெகுசீக்கிரத்தில் ஏற்படுத்துவதில் தீவிர அக்கறை கொண்டிருப்பின், உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் குறுகிய காலம் நீடிக்கப் போகும் பழமை வாய்ந்த நிர்வாகக் கூட்டமைப்பு ஒன்றினை பெருமளவு பொருட் செலவில் வடக்கு - கிழக்கில் உருவாக்கி ஏன் காலத்தையும், வளங்களையும் வீணடிக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பினர்.

# உள்ளூராட்சித் தேர்தல் இருபிரிவாக நடத்தப்படும் எனத் தெரிவிப்பு!

(அரியம்)

உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் எதிர்வரும் மார்ச் 20ம் திகதி புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெறும் எனவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் 25ம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும் எனவும் நேற்று நண்பகல் தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் மேலும் பிற்போடப்படலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமான நிரந்தர யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் இடைக்கால நிருவாகம், பேச்சுவார்த்தை என்பன ஆரம்பிக்கும்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் பல மாதங்கள் பிற்போடப்படும் சாத்தியம் உள்ளதாக ஐ.தே.கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி ஒருவர் தினக்கதிருக்கு நேற்று மாலை தெரிவித்தார்.

# ஒரு வாசகரின் எதிர்வினை

## தமிழரின் கலாசாரம் நூலில் தொங்குகிறதா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை 03.02.2002 ஆந் திகதி தங்கள் பத்திரிகையில் வெளியான 'தமிழ்ப் பெண்ணினத்தின் பண்பாட்டுக் கலாசாரத்தைப் பாதுகாப்போம்' எனும் தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு நான் ஒரு தமிழ் பெண் என்ற ரீதியில் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

காலங்காலமாக பெண்ணடிமையைப் பேணுவதற்காக கலாசார காவியாக பெண்ணைக் கையாண்டுவரும் சமூகப் போக்கிற்கு மேலும் உரமிடுவதாகவே இச் செய்தியுள்ளது.

மேலும் கருத்தியல் தெளிவில்லாது பயன்படுத்தப்பட்ட பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகங்கள் வேதனையைத் தருகிறது. அடையாள அட்டைச் சோதனை அரணினுள் எந்தப் பெண்ணும் சோரம் போகவில்லை. (இது பாலியல் வல்லுறவுக்கு இலக்கானவளை கற்பழிக்கப்பட்டவள், களங்கப்பட்டவள் எனக் கூறுவதற்கு ஒப்பானது) வேண்டாத சோதனையை எந்தப் பெண்ணும் விரும்புவதுமில்லை, ஏன் ஆண்களும் கூட. இந்த துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர்களின் கருத்தைப் பார்த்தால் பாலியல் வல்லுறவு என்ற குற்றமே நடைபெறுவதில்லை எல்லோரும் சோரம் போகிறார்கள் என்பதா?

இது தவிர எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களைக் குறித்த ஒரு சம்பவத்தை மட்டும் காரணமாகக் காட்டி (அதன் உண்மைத்தன்மை பற்றிய நிச்சயமுமில்லாது) மாணவர் சந்ததியே சீரழிந்து போனதுபோல பழிசுமத்தியிருப்பது எந்தவிதத்தில் நியாயம்?

இளம் பெண்களை தமிழ்ப் பெண்ணின் பண்பாட்டைப் பேணும் உடைகளை உடுத்தி தமிழனின் கலாசாரத்தைப் பேணுமாறு விழித்துள்ள இவர்களிடம் என்னுடைய வினா, நான் அறிய எனது பூட்டி மேல் சட்டை இல்லாது சேலை கட்டினார், பாட்டி சேலையும் சட்டையும் போட்டார், அம்மா சோட்டியும் பாவாடையும் உடுத்தார், அக்கா சட்டை அணிய நான் சல்வார் போடுகிறேன். இதில் எது தமிழரிற்கே உரித்தான கலாசார உடை என்பதைத் தெளிவுபடுத்துங்கள். அதேபோல எனது பூட்டன் வேட்டியும் சால்வையும் போட்டார், பாட்டன் வேட்டியும் சேர்ட்டும் அணிந்தார், அப்பா நீளக்காற்சட்டையும் சேர்ட்டும் அணிந்தார், தம்பி டெனிம் ஜீன்சும் ரீசேர்ட்டும் போடுகிறான். இதில் தமிழரிற்கே உரித்தான ஆடைக் கலாசாரம் எது? கோவணமும் வேட்டியுமா? காலத்தின் நிமித்தம் இது பொருத்தமானதாகுமா? அவ்வாறாயின் ஏன் தமிழ்ப் பெண்களுக்கு பண்பாட்டைப் பேணும் உடை? இது இருபாலாருக்கும் பொருந்துமல்லவா?

பெண்ணுரிமை, பெண்சுதந்திரம் பற்றிப் பேசும் இவர்கள் பெண்ணுக்குக் கூறும் இந்தக் கட்டுப்பாடு எந்த விதத்தில் பெண்ணுக்கு விமோசனமளிக்கும்?

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

இப்படிக்கு,
அபிராமி
தாளங் வன்வெளி.

# பேரினவாதம் அணிதிரண்டு ...

(2ம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் போராட்டத்துக்கு, கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவா ஜிலிங்கம் (ரெலோ) மட்டுமே தொடர்ச்சியாகத் தனது ஆதரவை வழங்கி வருகின்றார்.

தமிழ் மக்களின் அவசரமான சில கோரிக்கைகளை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டு பெருவாரியான மக்கள் ஆதரவைப் பெற்ற கூட்டமைப்பு, தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடடால் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்போம் என தேர்தலுக்கு முன்னர் சொன்னதை ஒருக்கால் மீள நினைவு கூறவேண்டும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் காலகட்டத்தைச் சரியாக உணர்ந்துகொண்டு உள்நாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மாணவர் சமூகங்கள், என்பனவும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் பாரிய மக்கள் எழுச்சிகளை முன்னெடுத்து, வரலாறு எம்மீது சுமத்தியுள்ள பெரும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

# சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி இரத்ததானம்!

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

(நமது நிருபர்)

காரணமின்றி கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுதது வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி இரத்ததானம் வழங்கும் நிகழ்வு- ஒன்று தற்பொழுது கொழும்பு விவேனாந்தா தேசிய பாடசாலை வளவில் நடைபெற்று வருகிறது.

இந்த இரத்ததான நிகழ்ச்சியை பாராளுமன்ற உறப்பினர் மனோகணேசன் தலைமையில் மேல் மாகாண மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சியில் அண்மையில் விடுதலைப் புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட இராணுவ வீரர்களும் காணாமற்போனோர் படையினர் உறவினர் சங்கத்தின் தலைவர் உட்பட பெரும்பாலான உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அத்துடன் பெரும் எண்ணிக்கையான மக்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# உடத்தலவின்ன படுகொலை நபர்களை கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்!

(நமது நிருபர்)

கடந்த பொதுத் தேர்தலின் போது உடத்தலவின்னயில் 10 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடனான தொடர்புபட்ட பிரதான சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமெனக்கோரி உடத்தலவின்ன பிரதேசவாசிகள் நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒண்றினை நடாத்தினர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# நோர்வே குழுவினரின் பேச்சு பயனுள்ளதாக முடிந்தது!

(நமது நிருபர்)

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக அரசுடன் நோர்வேயின் சமாதான தூதுக் குழுவினர் கடந்த மூன்று நாட்களாக நடத்திய பேச்சு பயனுள்ளதாக அமைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பேச்சுவார்த்தையினை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஷெல்ஹசன் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிறுபான்மை கட்சி தலைவர்களுடன் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற் கைதானோர் விடுதலையில் அரச சட்டத்தரணிகள் உதவுவர்!

## சட்டமா அதிபர் உறுதியளித்ததாக சட்டத்தரணி இரத்தினவேல் தகவல்

(நமது நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் பயங்கரவாதிகள் குறித்த தகவல் தரத் தவறினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவிப்பதற்கு தாம் ஆவண செய்வதாகச் சட்டமா அதிபர் உறுதியளித்துள்ளதாகக் கொழும்பில் உள்ள மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான சங்கத்தினைச் சேர்ந்த சட்டத்தரணி இரத்தினவேல் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதமிருக்கிறார்கள், வேறு சில நடவடிக்கைகளும் எடுத்துவருகிறார்கள் என்ற செய்தி கிடைத்ததைத் தொடர்ந்து எமது சங்கம், வேறுபல மனித உரிமை அமைப்புக்களையும் கூட்டி நடத்திய கூட்டத்தில் தொடர்ந்து எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய சட்டமா அதிபரிடம் கைதிகள் விடுதலை தொடர்பாக வினாவிய போது அதன் முதல்கட்ட நடவடிக்கைகளாக இவற்றினை மேற்கொள்ளவுள்ளதாகக் கூறியுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்கள அரச சட்டத்தரணிகள் இப்பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டவர்களது வழக்குகள் மேல் நீதிமன்றுக்கு வரும் போது அவர்களது விடுதலைக்கு உதவுவார்கள், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு மேல்நீதிமன்றம் பிணை வழங்க முடியாதானாலும் பிணை கோரப்படுமானால் அதற்கு ஆட்சேபிக்கமாட்டார்கள் அத்தோடு கைது செய்யப்பட்டு இதுவரை வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்படாதுள்ள பயங்கரவாதிகள் குறித்த தகவல் வழங்காமை என்ற பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கும் உறுதியளித்துள்ளார் என்றார்.

"இதன் அடுத்த கட்டமாகவே நாங்கள் இக்கைதிகள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து வருகிறோம். கைதிகளைப் பொறுத்தவரை சுமார் 60வீதமானோர் இப் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டவர்களாகவே உள்ளனர் எனவும் சட்டத்தரணி இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என கொழும்பு சார் மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றமை தொடர்பாக பி.பி.சி.க்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவிதுள்ளார்.

# ஒந்தாச்சிமடம் மனிதவலு முகவர் நிலைய வழக்கில்- கொள்ளையில் ஈடுபட்ட ஐவருக்கு இம்மாதம் 22வரை விளக்கமறியல்

(அலுவலக நிருபர்)

ஓந்தாச்சிமடம் மனிதவலு முகவர் நிலையத்தின் களஞ்சியத்தினுள் நுழைந்து கடந்த வியாழனன்று பொருட்களைக் கொள்ளையிட்டு டிப்பர் ரக வாகனம் ஒன்றில் வெளியேற முயன்ற ஐவரையும் 22ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எல்.அப்துல் கபூர் உத்தரவிட்டுள்ளார்.

களுதாவளையைச் சேர்ந்த சி.பிரதாபன்,செ.பிரதாபன், ந.சுதாகரன்,ப.மகேஸ்வரன்,கே.விநாயகலிங்கம் உட்பட ஐவர் மீதே இவ்விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவுள்ளது.

இவர்கள் நிலையத்தினுள் சென்று கொள்ளையிட்டுத் திரும்புகையில் களுவாஞ்சிகுடி விஷேட அதிரடிப்படையினரால் முகவர் நிலைய வாசலில் வைத்து கைது செய்யப்பட்டு களுவாஞ்சிகுடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களிடம் இருந்து ஒரு தன்னியக்கித் துப்பாக்கி மீட்கப்பட்டது என்பதும் மேலதிக விசாரணைகளைக் களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் கடத்திச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒப்படைப்பு!

(காரைதீவு நிருபர்)

காரைதீவில் கடந்த 02ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் விடுதலைப்புலிகள் தலையிட்டதைத் தொடர்ந்து 05 நாட்களின் பின்னர் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காரைதீவைச் சேர்ந்த எஸ்.தயாபரன் என்பவரின் ஸ்பிளெண்டர் ரக ஹொண்டா மோட்டார் சைக்கிளை புலிகள் எனக்கூறி இரவில் வெள்ளை வானில் வந்த கோஷ்டியினர் கடத்திச் சென்றமை தெரிந்ததே. விடயம் விடுதலைப்புலிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, அவர்கள் விசாரணையில் ஈடுபட்டனர்.

அதிஷ்டவசமாக வெள்ளை வானின் இலக்கமும், அதில் வந்த ஒருவரையும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் ஏலவே இனங்கண்டிருந்தமை தேடலுக்கு உதவியது.

விடுதலைப்புலிகளின் தலையீட்டை அடுத்து கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கடந்த 07ஆம் திகதி மீண்டும் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர் தண்டிக்கப்பட்டார்.

புலிகளின் பெயரைச் சொல்லிக்கொள்ளை, கப்பம் கேட்டல், திருட்டு முயற்சிகள் இடம்பெற்று வருவதைப் பொது மக்கள் புலிகளிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அண்மையில் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்ட புலிகள் செயலிலும் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# -கொழும்பு மட்டக்களப்பு புகையிரத சேவை சீரமைப்பு- புகையிரதப் பாதைகளிலுள்ள சட்ட விரோதக் குடியேற்றங்கள் பொலிஸாரால் அகற்றப்படுகின்றன!

(தர்ஷன்)

கொழும்பு மட்டக்களப்பு புகையிரதப் பாதையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வீடுகள் மற்றும் கடைகளை வாழைச்சேனைப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அகற்றி வருகின்றனர்.

புகையிரதப் பாதையில் இருந்த சிலிப்பர் கட்டைகள், தண்டபாள இரும்புகள், கற்கள் போன்றவற்றைப் பாதுகாப்புப் படையினரும் பொது மக்களும் தமது தேவைகளுக்கு எடுத்துச் சென்றமை காரணமாக புகையிரதப் பாதை இவ்வளவு காலமும் செயலற்று இருந்தது. தற்போது மீண்டும் கொழும்பு மட்டக்களப்புப் புகையிரத சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதால், வீடுகள் அமைத்துக் குடியிருந்த குடும்பங்களை இப்பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு புகையிரத திணைக்களத்தினர் முன்னறிவித்தல் வழங்கியும், குடியிருப்பாளர். இதற்கு செவி சாய்க்கவில்லை.

இதனையடுத்தே பொலிஸார் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட வீடுகள், கடைகளையும் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தில் அகற்றி வருகின்றனர்.

தற்போது ஆட்சி அமைத்துள்ள அரசாங்கத்தினால் கொழும்பு-மட்டக்களப்பு புகையிரத சேவையை நடாத்துவதற்குப் புகையிரத திணைக்களத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மார்ச் மாதம் மூன்றாம் வாரத்தில் வாழைச்சேனை வரை புகையிரத சேவைகள் நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ள புகையிரதப் பகுதி பொது முகாமையாளர் பிரியால் த சில்வா சட்டவிரோதமாகப் புகையிரதப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் தொடர்ந்து அகற்றப்பட்டு வருவதாகவும் அறிவித்துள்ளார்.

# கல்லாறு இந்து கலாசார மண்டபம் பொறுப்பேற்றல் பிரச்சினை தீர்வு

(கல்லாறுநிருபர்)

31 இலட்டம்செலவில் நிர்மாணிக்கப்பட்ட கல்லாறு இந்து கலாசார மண்டபத்தைக் கையேற்பதில் பெரிய கல்லாறு சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயபரிபாலன சபைக் கும்.கல்லாறு இந்துஇளைஞர் மன்ற த்திற்குமிடையே நிலவி வந்த சர்ச்சை சுமூகமாகத் தீர்ந்துள்ளது.

பரிபாலன சபை தலைவர்த.கணபதிப்பிள்ளை, பெரிய கல்லாற்றில் உள்ள அனைத்துக் கழகங்களினதும் தலைவவர்களை அழைத்து ஆலோசனை நாடாத்தியதன் மூலமே சர்சைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கட்டடத்துக்குரிய திறப்பை பிரதேச செயலகத்தில் பெற்று ஆலய வண்ணக்கர் இந்து இளைஞர் மன்றத்திடம் ஒப்படைத்தார்.

# க.திவ்வியன், சிவராமுக்கு விருதுகள். கனடா தமிழ் மாணவர் ஒன்றியம் வழங்கியது!

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக் கழக மாணவர் க.திவ்வியன், தமிழ் ஊடகவியலாளரும், இராணுவ ஆய்வாளருமான டி.சிவராம் ஆகியோருக்கு கனடா பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர் ஒன்றியம் விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளது.

கனடா பல்கலைக் கழகங்களின் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் நடைபெற்ற தமிழ் விழாவில் சிறந்த பல்கலைக் கழக மாணவன் என்ற விருது திவ்வியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திவ்வியனுக்கான விருது விழாவுக்குச் சென்றிருந்த யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜிடம் கையளிக்கப்பட்டது. இவ்விருதை யாழ். சிறைச்சாலை யில் வைத்து திவ்வியனுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வொன்றியம் நிகழ்த்திய தமிழ் விழாவில் ஊடகவியலாளரும், இராணுவ ஆய்வாளருமான டி.சிவராமும் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# ஏறாவூர் அலிகார் மாணவன் கடல் நீரில் மூழ்கி மரணம்!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்-சவுக்கடி கடலில் குளித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

ஏறாவூர் 3ஆம் குறிச்சியைச் சேர்ந்த 18 வயதுடைய அசனார் நௌஷாத் என்பவரே இவ்வாறு மரணித்தவர் ஆவார்.

இவரது சடலம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் மீட்கப்பட்டது.

ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மாணவரானக் இவர் பாடசாலை விடுமுறையை கழிக்க சக நண்பர்களுடன் பொழுதுபோக்காகச் சென்று குளித்துக் கொண்டிருந்த வேளை நீர்ச் சுழியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் மூழ்கி சுமார் பத்து நிமிடநேரத்தில் இவரது சடலம் கரையொதுங்கியுள்ளது. ஏறாவூர் காட்டுப் பள்ளி முஸ்லிம் மையவாடியில் ஜனாஸா நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

# வருட பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

செங்கல், மணல், கருங்கற்கள் விற்பனையாளர் ஒன்றியத் தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பி.ப.2.00 மணிக்கு ஒன்றியத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ள இதற்கு அங்கத்தவர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறு சங்கத்தின் காரியதரிசி கிறிஷ்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

## மட்டு...

தவறியதாலும் மற்றும் பல குழுக்கள் உரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யாததாலும் இந்நிலை ஏற்பட்டதாக தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக கட்சி வட்டாரங்கள் மற்றும் சில சுயேச்சைக் குழுக்களிடம் வினவியபோது கடைசி நேரம் வரையிலும் உள்ளூராட்சிசபை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு விடும் என்று நம்பியிருந்ததால் வேட்பு மனுத்தாக்கள் செய்வதற்கான ஏற்பாடுகள் முன் கூட்டியே செய்யப்படவில்லை எனவும் கடைசி நேரத்தில் மனுக்கள் தயார் செய்யப்பட்டதால் பல்வேறு குழப்பங்கள் நேர்ந்துவிட்டதாகத் தெரிவித்தன்.

கடைசி நேரம் வரையில் தேர்தல் நடைபெறாது என எண்ணியிருந்துவிட்டதாலும் பின்னர் நடைபெறும் வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்ட பின்னரும் தேர்தலைப் பகிஸ்கரிப்பதென மட்டு. அம்பாறை கூட்டமைப்பு அறிக்கை விட்டிருந்ததால் வேட்பு மனுத்தாக்கலுக்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்த கூட்டமைப்பு வட்டாரங்கள் சில,

இறுதி நேரத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் வேட்பாளர்களைத் தெரிவதில் இழுபறி நிலை காணப்பட்டதாலேயே உரிய நேரத்துக்கோ அன்றி தேவையான அத்தாட்சிப்பத்திரங்களுடனோ வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய முடியவில்லை எனக் கவலை தெரிவித்தன.

இதே நிலைமை திருகோணமலை மாவட்டத்திலும் காணப்பட்டதாகத் திருமலை கூட்டமைப்பு வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

# ஓட்டமாவடி தேனீர்க் கடைக் கழிவு வடிகால்களில் சேர்வதால் துர்நாற்றம்!

(ஓட்டமாவடி இஸ்மாயில்)

ஓட்டமாவடி பிரதான வீதியில் அமைந்துள்ள தேனீர்க்கடை ஒன்றின் கழிவு நீர் வடிகால்களுக்குள் அனுப்பப்படுவதால் பிரதான வீதிப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக இதர கடைக்காரர்கள் மற்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் பல சிரமங்களை அனுபவிப்பதாகவும் இதற்குத் தக்க நடவடிக்கையினை அதிகாரிகள் எடுக்கத் தவறி வருகின்றனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தேனீர்க் கடை ஓட்டமாவடி வர்த்தகச் சங்கத்தலைவரது தேனீர்க்கடை எனத் தெரிவிக்கும் மக்கள் நீண்டகாலமாக இந்நிலையே இருந்து வருகிறது எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

## விசாரணை...

டுத்துமாறு கோரியும், விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதைக் கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தின் காரணமாக, மடவள நகரில் நேற்று நண்பகல் கடைகள் அடைக்கப்பட்டு, வீதிகளின் பல இடங்களில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டிருந்தன.

மடவள படுகொலை குறித்து பொலிஸார் இதுவரையில் பலரை விசாரணக்குட்படுத்தியுள்ளனர். பல இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்படுகொலையுடன் முன்னாள் பாதுகாப்பு அமைச்சது அனுருத்த ரத்வத்தையின் மகன்களுக்கு தொடர்பிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அவர்களை கைது செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டபோதும் பொலிஸாரால் இதுவரையில் இருவரையும் கைது செய்யமுடியவில்லை.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட மடவள முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரான அஸ்மி மரிக்கார், ''குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் பொலிஸாரின் கையறு நிலை காரணமாக, மக்கள் விரக்தியடைந்துள்ளனர்" என தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.